ClinicalKey Usage Statistics

Content Usage Total	JAN	FEB	MAR	APR	MAY	JUN	JUL	AUG	SEP	OCT	NOV	DEC	YTD
Content Views	3,742	6,646	4,279	2,102	2,258	3,093	2,828	3,356	2,542	6,110	5,896	2,067	44,919
Topic Page Views	834	837	952	607	1,036	999	871	1,162	1,034	652	1,071	367	10,422
PDF Downloads	5,933	9,506	14,154	7,003	3,197	6,968	7,396	19,920	19,394	10,824	10,847	1,784	116,926
Content Prints	14	29	47	9	4	17	15	10	14	10	12	2	183

	JAN	FEB	MAR	APR	MAY	JUN	JUL	AUG	SEP	OCT	NOV	DEC	YTD
Book	2,139	5,031	1,127	917	685	1,066	1,011	1,422	886	4,767	4,026	1,139	24,216
Journal	1,261	1,291	2,758	966	1,336	1,791	1,574	1,650	1,465	1,115	1,651	848	17,706
Clinical Overviews	211	222	281	156	142	149	136	164	143	135	120	45	1,904
Patient Education	3	5	3	4	7	1	0	5	3	15	5	0	51
Medline	43	5	8	0	0	6	1	2	3	0	0	3	71
Multimedia	25	1	11	10	1	11	12	3	6	15	3	0	98
Clinical Trial	5	13	9	6	11	5	8	9	5	4	5	1	81

14.3.3 இ - ஜர்னல்கள் மற்றும் இ- நூல்கள் பதிவிறக்கம்

மருத்துவ சிகிச்சை தரவுத்தளத்தனைப் பயன்படுத்தி 2022 ஆம் ஆண்டில் மொத்தமாக 196 இ - ஜர்னல்கள் மற்றும் 32 இ - நூல்கள் பதிவிறக்கம் செய்யப்பட்டன.

14.3.3 நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கிடைத்த நூல்கள் பற்றிய பட்டியல்

2022 ஆம் ஆண்டில் 46 தலைப்புக்களின் கீழ் நூல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. பெறப்பட்ட அன்பளிப்புக்கள் பற்றிய விபரங்கள் இலக்கங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. (அன்பளிப்புக்களின் பெறுமதி அண்ணளவாக 46 x 1000 = 46000/=)

PGIM நூலகம் - அன்பளிப்புக்கள் (நூல்கள்) 2022

திகதி	அன்பளிப்பு இல.	நூலின் பெயர்	அன்பளிப்புச் செய்தவர்	முகவரி	நூல்களின் எண்ணிக்கை	பெறுமதி	குறியீட்டு எண்
12/01/22	PGIML/Don/01/22	Hospital Infection Prevention & Control Manual Hospital Infection Prevention & Control Manual	இலங்கை நுண்ணுயியலாளர்கள் கல்லூரி	இலங்கை நுண்ணுயியலாளர்கள் கல்லூரி	2	1000 x 2	18692 18693
02/02/22	PGIML/Don/02/22	National Guidelines clinical management of dengue infection National Guidelines clinical	SLMA (இலங்கை மருத்துவ சங்கம்)		3	1000 x 3	18694 18696

		management of dengue infection National Guidelines clinical management of dengue infection					
17/02/22	PGIML/Don/03/22	Regional Implementation framework for elimination 2021-2022	உலக சுகாதார நிறுவனம்	உலக சுகாதார நிறுவனம்	1	1000x1	18697
04/03/22	PGIML/Don/04/22	Managing programmes on reproductive, maternal, new born, child and adolescent health Module 1 Managing programmes on reproductive, maternal, new born, child and adolescent health Module 2 Managing programmes on reproductive, maternal, new born, child and adolescent health Module 3	உலக சுகாதார நிறுவனம்	உலக சுகாதார நிறுவனம்	3	1000x3	18698 18700
05/03/22	PGIML/Don/05/22	Management of the dead in disasters and catastrophes	தடயவியல் நோயியல் கல்லூரி	தடயவியல் நோயியல் கல்லூரி	1	1000x1	1 8701
08/03/22	PGIML/Don/06/22	Sri Lanka re-emergence of youth bulge	பேரா. ஐ. டி சொல்வா	NCAS	1	1000x1	18702
08/03/22	PGIML/Don/07/22	Notes of Maxillofacial injuries	கலாநிதி பராக்கிரம	OMF அறுவைச் சிகிச்சைப் பிரிவு	1	1000x1	18703
04/04/22	PGIML/Don/0	Larval	திரு.டப்ளியு.பிரமதர்ஷன	இலங்கை தேசிய	1	1000x	18704

	8/22	Paragonimiasis		நூலகம்		1	
04/04/22	PGIML/Don/09/22	SLMA 247 covid Helpline	SLMA (இலங்கை மருத்துவ சங்கம்)	SLMA (இலங்கை மருத்துவ சங்கம்)	2	1000x2	18705-18706
		SLMA 247 covid Helpline					
04/04/22	PGIML/Don/10/22	Colour Guide picture tests Clinical Medicine	சாந்தனி வனிகதுங்க	PGIM	23	1000x22	18713-18735
		Colur Guide HIV infection and Aids					
		Diagnostic picture Tests in cardiology					
		Diagnostic Picture Tests in Dermatology					
		Data Interpretation question and case history MRCP part 2					
		Oxford textbook of medicine 3rd edition					
		MRCP Part 2 revision book					
		Slide Interpretation question MRCP Part 2					
		Self–Assessment Picture Tests Medicine Vol 1					
		Self–Assessment Picture Tests Medicine Vol 2					
04/04/22		Self–Assessment Picture Tests Medicine Vol 3					
		Self–Assessment Picture Tests Medicine Vol 4					
		Antibiotic					

		Guidelines 6th ed.					
		Illustrated case histories of clinical medicine					
		A guide to healthy living your child your family					
		Radiology for the MRCP					
		A guide to the MRCP Part 2					
		Diagnosis in colour Cardiology					
		Radiology cases for the MRCP					
		Colour guide picture tests Imaging					
		Colour Guide Dermatology 2nd edi.					
		Colour guide Ophthalmology 2nd edi.					
		Colour guide Ophthalmology 2nd edi.					
06/04/22	PGIML/Don/11/22	Lecture notes in Family Medicine	பேரா.நந்தனி டி சில்வா	களனிப் பல்கலைக் கழகம்	2	1000x2	18736-18737
		Lecture notes in Family Medicine					
08/06/22	PGIML/Don/12/22	A Bibliography of Sri Lankan Surgical Research	கலாநிதி ஏ.அபேகுணசேக்கர	கலாநிதி ஏ.அபேகுணசேக்கர	1	1000x1	18738
31/10/22	PGIML/Don/13/22	මරණය මරණ පරීක්ෂණය සහ ලියාපදිංචිය	කලානිති එස්.කොඩිකාර	කලානිති එස්.කොඩිකාර	5	1000x5	18739-18743
		නිහඩ නොවූ සාක්ෂි 1					
		නිහඩ නොවූ සාක්ෂි 2					
		නිහඩ නොවූ සාක්ෂි 3					
		නිහඩ නොවූ සාක්ෂි 4					

14.3.5 ஆராய்ச்சி நோக்கங்களுக்காக பெறப்பட்ட இலவச அணுகல் தரவுத்தளங்கள்

இந்த நூலகம் 2022 இல் UpToDate மற்றும் BMJக்கான தற்காலிக இலவச அணுகலைப் பெற்றது.

14.3.6 பல்கலைக்கழக நூலகங்களில் இருப்புக்கள் சரிபார்ப்பு நடைமுறை – 01/2022 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை

PGIM நூலகம் 01/2022 ஆத் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய இருப்புக்கள் சரிபார்ப்பை பிரதான குழு மற்றும் இரண்டு உப குழுக்களின் கீழ் மேற்கொண்டது.

14.3.7 PGIM நூலகத்தினால் நடாத்தப்படும் பயிற்சிப் பட்டறைகள்

பட்டப்பின் பயிலுனர்களுக்கான Turnitin *கணக்கு வசதிகள்*

2022 மார்ச் 18 ஆம் திகதி பட்டப்பின் படிப்பு பயிலுனர்களுக்கு Turnitin கணக்கு வசதிகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான பயிற்சிப் பட்டறையொன்று நடாத்தப்பட்டதுடன் அதில் 43 பேர் பங்குபற்றியதுடன் (பௌதிக - நேரடி : 22 பேர், Zoom மூலம்: 21 பேர்) உயிர் மருத்துவத் தகவல், மருத்துவக் கல்வி, சமூக மருத்துவம் மற்றும் மருத்துவ நிர்வாகம் பற்றி எம்.எஸ்.சி பாடநெறியைப் பயிலுபவர்கள் பங்குபற்றினர். வளவாளர்களாக PGIM சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பந்துல சிறிபத்தன மற்றும் PGIM சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி MPP தில்ஹானி ஆகியோர் கலந்துகொண்டனர்.

14.3.8 Turnitin மென்பொருளைப் பயன்படுத்தி கருத்துத் திருட்டு சோதனையை மேற்கொள்ளல்

14.3.8 (i) கருத்துத் திருட்டு சோதனை (பொது)

2022 ஆம் ஆண்டில் மொத்தமாக 3354 பட்டப் படிப்பு ஆய்வுக் கட்டுரைகள், விடய ஆய்வுகள், ஆராய்ச்சி முன்மொழிவுகள் மற்றும் ஒப்படைகள் **'டர்ன்இட்இன்' (Turnitin) '** மென்பொருளைப் பயன்படுத்தி கருத்துத் திருட்டு சம்பந்தமாக சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இல.	மாதம்	வழங்கப்பட்ட ஒத்த தன்மை பற்றிய அறிக்கை
01	ஜனவரி	165
02	பெப்ரவரி	258
03	மார்ச்	292
04	ஏப்ரல்	299
05	மே	177
06	ஜூன்	399
07	ஜூலை	280
08	ஆகஸ்ட்	387
09	செப்டெம்பர்	371
10	ஒக்தோபர்	279
11	நவம்பர்	404
12	திசெம்பர்	43
மொத்தம்		3354

14.3.8 (ii) கருத்துத் திருட்டு சோதனை (இறுதி அறிக்கை)

2022 ஆம் ஆண்டில் பரீட்சைகள் பிரிவு, கற்கைப் பிரிவுகள், வெளிநாட்டுப் பிரிவு மற்றும் MERC அலுலகத்தினால் அனுப்பப்பட்ட மொத்தம் 1704 பட்டப் படிப்புடன் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள்,

விடய ஆய்வுகள், ஆராய்ச்சி முன்மொழிவுகள் மற்றும் ஒப்படைகள் **'டர்ன்இட்இன்' (Turnitin) '** மென்பொருளைப் பயன்படுத்தி கருத்துத் திருட்டு சம்பந்தமாக பரீட்சிக்கப்பட்டது.

கருத்துத் திருட்டு சோதனை (இறுதி அறிக்கை)

இல.	விடயம்	கற்கைப் பிரிவு	பரீட்சைகள் பிரிவு	வெளிநாட்டுப் பிரிவு
1	உணர்விழப்பியல்	76	0	0
2	மருத்துவ நிருவாகம்	35	34	0
3	புற்றுநோய் சிகிச்சையியல்	0	5	4
5	தடயவியல் மருத்துவம்	15	35	0
6	மருத்துவக் கல்வி	0	82	0
7	கதிரியக்கவியல்	66	0	0
8	குடும்ப மருத்துவம்	9	0	0
9	மன நல மருத்துவம்	0	0	9
10	சமூக மருத்துவம் / சமூக பல் மருத்துவம்	114	74	0
11	தீவிர கண்காணிப்பு மருத்துவம்	4	0	0
12	கண் நோயியல்	0	20	8
13	தோல் நோயியல்	13	0	0
14	மேக நோயியல்	7	22	2
15	குழந்தை நோயியல்	60	0	0
16	மருத்துவவியல்	163	99	0
17	நச்சுயியல்	0	1	0
18	நுண்ணுயிரியல்	11	9	0
19	ஊட்டச்சத்துக்கள் சிகிச்சையியல்	17	0	0
20	பற்களை மறுசீரமைப்பு	0	4	0
21	வைரசியல்	0	1	0
22	பெண் நோயியல் மற்றும் மகப்பேறு	20	0	0
23	காது, மூக்கு, தொண்டை நோயியல் (ENT)	13	0	0
24	திசுத்துயரியல்	26	0	0
25	சுவாசத் தொகுதி மருத்துவம்	7	0	0
26	நரம்பியல்	15	0	0
27	இருதயவியல்	8	0	0
28	பல் சத்திர சிகிச்சை	0	0	0
29	உயிரியல் தகவலியல்	0	125	0
30	புனர்வாழ்வு மருத்துவம்	0	0	0
31	வாதவியல் மற்றும் புனர்வாழ்வு மருத்துவம்	6	0	0
32	முதியோர் மருத்துவம்	3	12	0
33	ஒட்டுண்ணியியல்	0	0	0
34	இரத்தவியல் சிகிச்சையியல்	31	0	0
35	DTCD	40	205	0
36	சிறுநீரகவியல்	6	0	0
37	ஊடுகலப்பு மருத்துவம்	7	0	0
38	பங்கஸியல்	0	0	0
39	பல் சீரமைப்பு மருத்துவம்	2	2	0
40	ஓமோன் தொழிற்பாட்டியல்	14	0	0

41	இனப்பெருக்க சுகாதாரம்	0	0	0
42	மருந்தியல் சிகிச்சையியல்	0	15	0
43	விளையாட்டுத்துறை மருத்துவம்	0	0	0
44	அறுவைச் சிகிச்சை	1	0	0
45	நோய்க் குறியியல்	26	0	0
46	மூலக்கூற்று மருத்துவம்	2	0	0
47	இரைப்பை குடலியல்	1	0	0
48	சுகாதாரத்துறைசார் அனர்த்த முகாமைத்துவம்	29	13	0
49	சுகாதார தகவலியல்	0	17	0
50	DHDP	0	19	0
51	இராணுவ மருத்துவம்	0	9	0
52	அவசர சிகிச்சை மருத்துவம்	4	0	0
53	OMF அறுவைச் சிகிச்சை	0	8	0
54	நோய்த் தடுப்பு சிகிச்சை மருத்துவம்	14	0	0
மொத்தம்		**865**	**816**	**23**

14.3.8 விடய ஆய்வறிக்கை, ஆய்வுக் கட்டுரைகளின் மென் பிரதிகள்

நூலக களஞ்சியசாலையிலுள்ள டிஜிட்டல் களஞ்சியங்களின் சேகரிப்பில் மொத்தம் 137 விடய ஆய்வறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் ஆராய்ச்சித் திட்டங்கள் (பின் எம் டி) சேர்த்துக்கொள்ளப்பட்டன.

விடயம்	**மென் பிரதிகளின் எண்ணிக்கை**
ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் ஆய்வறிக்கைகள்	
சமூக பல் மருத்துவம் – MD	02
சமூக பல் மருத்துவம் – MSc.	02
சமூக மருத்துவம் - MD	04
சமூக மருத்துவம் – MSc.	21
சுகாதாரத்துறைசார் அனர்த்த முகாமைத்துவம் - டிப்ளோமா	14
மருத்துவ நிருவாகம் – MD	11
மருத்துவ நிருவாகம் - MSc.	01
மருத்துவ நுண்ணுயிரியல் – MD	05
மருத்துவ ஒட்டுண்ணியியல் – MD	01
மருத்துவ வைரஸியல்– MD	01
மேக நோயியல் – MD	02
விடய ஆய்வுகள்	
முதியோர் மருத்துவம் - டிப்ளோமா (விடய ஆய்வுப் புத்தகம்)	06
மருத்துவம் – MD (விடய ஆய்வுப் புத்தகம்)	50
மேக நோயியல் - டிப்ளோமா (விடய ஆய்வுப் புத்தகம்)	06
காது, மூக்கு. தொண்டை சார்ந்த நோயியல் (விடய ஆய்வுப் புத்தகம்)	01
ஆராய்ச்சித் திட்டங்கள் (பின் எம் டி)	
பொது மருத்துவம்	03
குழந்தை நோயியல்	03
கண் நோயியல்	01
இரசாயன நோயியல்	01

திசுத் துயிரியல்	02
மொத்தம்	**137**

14.3.10 ஆய்வுக் கட்டுரைகள், விடய ஆய்வு நூல்களை டிஜிட்டல் மயப்படுத்தல் திட்டம்

29 ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் விடய ஆய்வு நூல்கள் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டன.

14.3.11 ***வலைதளங்களில் ஆய்வறிக்கைகள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகளின் மென்பிரதிகளை வாசித்தல்***

வலைதளம் மூலம் படிக்கக்கூடிய பயன்முறையில் ஆய்வறிக்கைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை வாசிப்பதற்காக URL இணைப்பை PGIM நூலகம் உருவாக்கியது. (ஆய்வுக் கட்டுரையைப் பதிவிறக்கம் செய்தல் பதிப்புரிமை மீறலாகும்.)

14.3.12 நூலக இணையவழிப் பட்டியல்

மொத்தம் 523 மற்றும் 103 இ - நூல்கள் (நூல்கள் பற்றிய தரவுப் பட்டியல்) **Koha** இணையத்தள நூலகப் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டது.

14.3.13 மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் கடந்த கால வினாத் தாள்கள்

2022 ஆம் ஆண்டில் மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் கடந்த கால 65 வினாத்தாள்கள் மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் நூலகத்தின் டிஜிட்டல் களஞ்சியத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. http://librepository.pgim.cmb.ac.lk/handle/1/2146

14.3.14 HINARI உட்பிரவேசித்தல் கோரிக்கை - 2022

2022 இல் மொத்தம் 239 பட்டப்பின் பயிலுனர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் HINARI ***உள்நுழைவு அணுகல் அனுப்பியுள்ளனர்.***

14.3.15 கட்டுரைகளை கோரும் சேவை

2021 ஆம் ஆண்டில் மொத்தமாக 690 கட்டுரைக் கோரிக்கைகள் மருத்துவ பட்டப்பின் படிப்பு பயிலுனர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் ஆலோசகர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 765 இற்கும் மேற்பட்ட கட்டுரைகள் இந்தக் கோரிக்கையாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

14.3.16 நூல்களை கட்டுதல்

2022 ஆம் ஆண்டில் மொத்தமாக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்குரிய 164 எழுத்தாவணங்கள் (நூல்கள், ஜர்னல்கள், கடந்த கால வினாத் தாள்கள், ஆண்டறிக்கைகள், நிதியறிக்கைகள்) கட்டப்பட்டுள்ளன.

கட்டுதல் வகை	**பூரணப்படுத்தப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை**
பூரண கட்டுதல்	**நூலகத்திற்குரியது = 110** **நிதிப் பிரிவுக்குரியது = 37**
பகுதியளவு கட்டுதல்	**நூலகத்திற்குரியது 17**
மொத்தம்	**164**

14.3.17 நூலகக் குழுக் கூட்டங்கள்

2022 மார்ச் 30 மற்றும் 2022 திசெம்பர் 15 ஆகிய திகதிகளில் இரண்டு நூலக குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இரண்டு கூட்டங்களுக்கும் மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பிரதிப்

பணிப்பாளர் பேராசிரியர் சாந்தனி வனிகதுங்க மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜீ.ஏ.ராஜகருணா ஆகியோர் தலைமை வகித்தனர்.

14.3.18 நூலக வெளியீடுகள் (இ - வெளியீடுகள்)

இந்த நூலகத்தினால் 1982 - 2012 வரையிலான காலக்கட்டத்திற்குரிய ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் ஆய்வறிக்கைகளின் சிறுகுறிப்பு நூலியல் தொகுக்கப்பட்டுள்ளது.

14.3.19 ஆராய்ச்சி அலுவல்கள்

- ***தில்ஹானி* M.P.P *மற்றும் வாதசிங்க, சந்திமா.(*2022). *இலங்கையில் மேல் மாகாணத்தில் உள்ள ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகளில்* (PMCUs) *மருத்துவ அதிகாரிகள் மத்தியில் மருத்துவ தகவல்களை அணுகுவதற்கான தடைகள்: ஒரு கணக்கெடுப்புஇ பல்கலைக்கழக நூலகர்கள் சங்கத்தின்* 12*வது சர்வதேச மாநாடு***
- ***தில்ஹானி, எம்.பி.பி., ரிஸ்கா இஹ்சான், சந்திம வாதசிங்க மற்றும் பந்துல சிறிபத்தன. (*2022) *மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை, நூலக ஆய்வரங்கு, கொழும்பு பல்கலைக்கழகம் வழங்கிய கட்டுரை கோரிக்கை சேவையை மதிப்பீடு செய்தல்.***
- ***வாதசிங்க, சந்திமா மற்றும் தில்ஹானி, எம்.பி.பி., (2022). மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் மருத்துவ நிபுணர்களிடையே மருத்துவத் தகவல்களின் பயன்பாட்டு முறை. இலங்கை பல்கலைக்கழக நூலகர்கள் சங்கத்தின் ஜர்னல், 25(1), பக்.1–26. DOI: http://doi.org/10.4038/jula.v25i1.8051***
- **தில்ஹானி, ஆ.ீஇ யு. *முனசிங்க.* ளூ. *சமரகோன்இ,(2022)* டீடழஉமஉாயனை னை ர்நயடவாஉயசநஇ ளுிசனைபெநச யேவரசந 978-3-031-14590-2**

14.3.20 நூலக பயிற்சி ஆராய்ச்சி

தகவலை எவ்வாறு மதிப்பிடுவது என்பதன் அடிப்படையில் நூலகப் பயிற்சி ஆராய்ச்சி* PGIM *நூலக இணையதளத்தில் பதிவேற்றப்பட்டது.

14.3.21 PGIM நூலக சேவை நிலையங்கள்

கீழ் குறிப்பிடப்படும் PGIM சேவை நிலையங்களுக்காக வழங்கப்பட்ட சேவைகள் மற்றும் வளங்கள்

1. காலி
2. ரஜரட்ட
3. யாழ்ப்பாணம்
4. குருநாகல்
5. மட்டக்களப்பு

14.3.22 PGIM *சேவைகள் நிலையத்தை நிறுவுதல்*

FC215/4.15- (03.12.2021) மற்றும் BoM (PGIM/DB/FM 215th -05.03.2022) இற்கிணங்க 01.04.2022 ஆம் திகதி முதல் கண்டி தேசிய மருத்துவமனையின் மருத்துவ பட்டப்பின் படிப்பு நிலையத்தில் PGIM சேவைகள் நிலையமொன்று அமைக்கப்பட்டது. 26.04.2022 ஆம் திகதி நான்கு (04) கணினிகள் ஒப்படைக்கப்பட்டன

14.3.23 2022 ஆம் ஆண்டு PGIM நூலக சேவைகள் நிலையங்களின் வலைதள விலைப்பட்டியல் கொடுப்பனவுகள்

SLT இணைப்பு: மட்டக்களப்பு, காலி, யாழ்ப்பாணம் மற்றும் அனுராதபுரம் மாத வாடகை ரூ. 8890.00 / மாதாந்திர பயன்பாடு 425 GB

மாதம்	மட்டக்களப்பு (ரூ.)	காலி (ரூ.)	யாழ்ப்பாணம் (ரூ.)	அனுராதபுரம் (ரூ.)
ஜனவரி 2022	6083.22	3050.33	3823.33	8890.00
பெப்ருவரி 2022	6083.22	2659.46	694.28	8890.00
மார்ச் 2022	6083.22	3931.52	4344.85	8890.00
ஏப்ரல் 2022	2131.33	2748.44	6083.22	8890.00
மே 2022	719.99	3061.11	3802.36	8890.00
யூன் 2022	719.99	3044.51	விலைப்பட்டியல் கிடைக்கவில்லை	8890.00
யூலை 2022	2522.74	2814.57	விலைப்பட்டியல் கிடைக்கவில்லை	8890.00
ஆகஸ்ட் 2022	6477.50	3141.04	5850.64	8890.00
செப்தெம்பர் 2022	7372.47	3442.62	7372.47	8890.00
ஒக்தோபர் 2022	விலைப்பட்டியல் கிடைக்கவில்லை	3546.73	விலைப்பட்டியல் கிடைக்கவில்லை	விலைப்பட்டியல் கிடைக்கவில்லை
நவம்பர் 2022	விலைப்பட்டியல் கிடைக்கவில்லை	4795.95	விலைப்பட்டியல் கிடைக்கவில்லை	விலைப்பட்டியல் கிடைக்கவில்லை
திசெம்பர் 2022	விலைப்பட்டியல் கிடைக்கவில்லை	விலைப்பட்டியல் கிடைக்கவில்லை	விலைப்பட்டியல் கிடைக்கவில்லை	விலைப்பட்டியல் கிடைக்கவில்லை

14.3.24 2022 ஆம் ஆண்டில் நூலகத்தின் வருமானம் (அச்சிடல், போட்டோ பிரதி மற்றும் ஸ்கேன் செய்தல் சேவை என்பவற்றினூடாக)

2022 ஆம் ஆண்டிற்கான நூலகத்தின் வருமானம் ரூ. 7713.00 ஆகும்.

14.3.25 புதிய அங்கத்துவம் - 2022

மாதம்	பட்டப்பின் பயிலுனர்கள்	விரிவுரையாளர் ஆளணி	தற்காலிகம்	சிறப்பு அனுமதி
ஜனவரி	8			
பெப்ரவரி	20	1		1
மார்ச்	8		1	
ஏப்ரல்	9	1		
மே	0		1	
ஜூன்	0			
ஜூலை	1			
ஆகஸ்ட்	2			
செப்டெம்பர்	6			
ஒக்தோபர்	18			
நவம்பர்	2			
திசெம்பர்	4			
மொத்தம்	78	2	2	1

14.3.26 நூலகத்தைப் பயன்படுத்துவோர் பற்றிய தரவுகள்

14.3.26 (i) பிரதான நூலகம், கற்கை நிலையம்

2022 ஆம் ஆண்டில் நூலகத்தைப் பயன்படுத்தியோர் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

மாதம்	பயன்படுத்தியோரின் எண்ணிக்கை
ஜனவரி	115
பெப்ரவரி	153
மார்ச்	309
ஏப்ரல்	110
மே	55
ஜூன்	52
ஜூலை	4
ஆகஸ்ட்	26
செப்டெம்பர்	29
ஒக்தோபர்	79
நவம்பர்	73
திசெம்பர்	38
மொத்தம்	1043

14.3.26 (ii) இ - நூலகம், PGIM பிரதான வளவு

மாதம்	பயன்படுத்தியோரின் எண்ணிக்கை
ஜனவரி	4
பெப்ரவரி	2
மார்ச்	3
ஏப்ரல்	5
மே	2
ஜூன்	4
ஜூலை	3
ஆகஸ்ட்	2
செப்டெம்பர்	3
ஒக்தோபர்	6
நவம்பர்	2
திசெம்பர்	4
மொத்தம்	40

14.3. 27 ஆளணி அபிவிருத்தி

திருமதி எம்.பி.பி தில்ஹானி மற்றும் திருமதி சந்திமா வாதசிங்க ஆகியோர் 2022 ஒக்தோபர் 27 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற பல்கலைக்கழக நூலகர்கள் சங்கத்தின் (ICULA) சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டனர்.

14.3.28 சிறப்பு ஆராய்ச்சிக்கான மூதவை விருதுகள் 2020 மற்றும் 2021

2022 நவம்பர் 16 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவகத்தின் பேராசிரியர் வி.கே.சமரநாயக்க கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2022 வருடாந்த ஆராய்ச்சி மாநாட்டின்போது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான சிறப்பு ஆராய்ச்சிக்கான மூதவை விருதை சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி சந்திமா வாதசிங்க, பெற்றார்.

14.3.29 நூலக தகவல் உதவியாளர் தரம் II பதவிக்கான பதவி உயர்வு

PGIM நூலகத்தில் நூலக தகவல் உதவியாளர் தரம் III பதவியை வகித்த செல்வி A.H.T.H.R. நிகேதனி மற்றும் செல்வி W.M.N.M. வனிகசேக்கர ஆகியோர் 2020.04.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நூலக தகவல் உதவியாளர் தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்டார்கள்.

14.3.30 ஆளணி அபிவிருத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றுதல் (உள்வாரி) PGIM நூலக ஆளணி

- **நூலகத்திற்குரிய இ - வளங்களை பயன்மிக்க வகையில் பயன்படுத்தல், விநியோகம் மற்றும் பரிமாற்றம் - 2022 யூலை 20 மற்றும் 2021 நவம்பர் 22.**
- **பயன்மிக்க வகையில் அன்றாட அலுவலகப் பணிகளை நடாத்துவதெப்படி? 2022 ஜனவரி 04.**

14.3.31 நூலக ஆளணிக் கூட்டங்கள்

2022 பெப்ருவரி 08 மற்றும் 2022 செப்தெம்பர் 13 ஆகிய திகதிகளில் PGIM நூலகத்தில் இரண்டு (02) ஆளணியினருக்கான கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

14.4 பொது நிர்வாகம்

14.4.1. 2022.12.31ஆம் திகதியன்று பணியாட்குழு பற்றிய தகவல்கள்

சேவைப் பிரிவு	சம்பளக் குறியிடு	பதவி	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	நிலவும் ஊழியர் எண்ணிக்கை	வெற்றிடம்
ஆரம்ப மட்டம்					
ஆரம்ப மட்டம் - திறன் சாராத	U PL 1	வேலை உதவியாளர்	16	14	2
		நூலக உதவியாளர்	5	3	2
ஆரம்ப மட்டம் - திறன் சார்ந்த	U PL 3	புத்தகம் கட்டுபவர்	1	1	-
		மின்சார தொழில்நுட்பவியலாளர்	1	1	-
		சாரதி	6	4	2
		நீர்க் குழாய் தொழில்நுட்பவியலாளர்	1	1	-
இரண்டாம் நிலை					
முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத	U MN 1	முகாமைத்துவ உதவியாளர்	43	36	7
		முகாமைத்துவ உதவியாளர் (கணக்குப் பதிவு)	2	2	-
		முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சியப் பொறுப்பாளர்)	1	-	1
		முகாமைத்துவ உதவியாளர் (காசாளர்)	1	-	1
		நூலக தகவல் உதவியாளர்	9	6	3
		தொலைபேசி இயக்குனர்/ வரவேற்பாளர் *	1	1	-
		மேற்பார்வையாளர் (பராமரிப்பு)	2	1	1
முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சார்ந்த	U MT 1	முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சார்ந்த)	11	2	9
தொடர்புடைய அலுவலர் - வகுதி 2	U MN 2	பணி மேற்பார்வையாளர் (சிவில்)	1	-	1
பதவிநிலை உதவியாளர்/ அதியுயர் தரம் மற்றும் சிரேஷ்ட பதவிநிலை உதவியாளர்	U MN 4	சிரேஷ்ட பதவிநிலை உதவியாளர் (நூலக சேவைகள்)	1	1	-
		பதவிநிலை முகாமைத்துவ உதவியாளர் / சிரேஷ்ட பதவிநிலை முகாமைத்துவ உதவியாளர்	17	17	-
		சிரேஷ்ட பதவிநிலை முகாமைத்துவ உதவியாளர் (தரவுகள் செயலாக்க இயக்குனர்)	1	1	-
மூன்றாம் நிலை					

கல்விசார் உதவியாளர் - வகுதி 2	U AS 1	கணனி நிரலாக்குனர்	1	1	-
கனிஷ்ட நிறைவேற்று / முகாமையாளர்	U EX 1	உதவி நிதி நிர்வாகி	1	-	1
		உதவிப் பதிவாளர்	3	3	-
கல்விசார் உதவியாளர் - வகுதி 1	U AS 2	உதவி வலையமைப்பு முகாமையாளர்	1	1	-
		கணனி நிரலாக்குனர்/ முறைமை பகுப்பாய்வாளர்	1	1	-
சிரேஷ்ட மட்டம்					
இடைநிலை மட்ட நிர்வாகி	U EX 2	சிரேஷ்ட உதவிப் பதிவாளர்	3	3	-
சிரேஷ்ட நிர்வாகி	U EX 2(a)	பிரதி நிதி நிர்வாகி	1	1	-
		பிரதிப் பதிவாளர்	1	1	-
விரிவுரையாளர்	U AC 3	விரிவுரையாளர் (பயிலுனர்) விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத) சிரேஷ்ட விரிவுரையாளர்	11	7	4
சிரேஷ்ட உதவி நூலகர்	U AC 3	சிரேஷ்ட உதவி நூலகர்	3	2	1
பேராசிரியர் / சிரேஷ்ட பேராசிரியர்	U AC 5	பிரதிப் பணிப்பாளர்	1	1	
		பணிப்பாளர்	1	1	-
நிலையான சம்பளம்		தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர்	2	1	1
		பாடநெறி ஒருங்கிணைப்பாளர்	4	-	4
		பாடநெறிப் பணிப்பாளர்	2	-	2
மொத்தம்			**156**	**114**	**42**

* **குறிப்பு** : வகித்தல் எனும் அடிப்படையில் ஒருவர் பிறிதொரு பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

- **கல்விசாரா ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் உயர் கல்வி அமைச்சினால் தற்காலிகமாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டதனால் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டது.**

14.4.2 ஊழியர் எண்ணிக்கை

மருத்துவ பட்டப் படிப்பு நிறுவகத்தின் பணியாட் தொகுதி 156 பதவிகளை உள்ளடக்கியுள்ளதுடன், மீளாய்வாண்டின்போது 42 பதவி வெற்றிடங்கள் நிலவியது. உயர்கல்வி அமைச்சினால் ஆட்சேர்ப்புக்களை தற்காலிகமாக இடைநிறுத்தியமையே இதற்குப் பிரதான காரணமாகும்.

புதிய நியமனங்கள் - கல்விசார் தரங்கள்

14.4.2.1 2022 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்படும் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பெயர்	பதவி	நியமனத் திகதி
கலாநிதி C.L. டி சில்வா	சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் I	01.06.2022
கலாநிதி G.A. ராஜகருணா	சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் II	01.07.2022

புதிய நியமனங்கள் - நிருவாக தரங்கள்

இல்லை

புதிய நியமனங்கள் - கல்விசாரா தரங்கள்

பெயர்	பதவி	நியமனத் திகதி
திரு. R.H. பெரேரா	பராமரிப்பு மேற்பார்வையாளர்- தரம் III	01.02.2022
Mr. K.A.T.C. Rathnasiri	முகாமைத்துவ உதவியாளர் - தரம் III	15.12.2022

ஒப்பந்த அடிப்படை / பணி ஒப்படை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்கள்

பெயர்	பதவி	நியமனத் திகதி
திரு. K.G. மானெத் மெத்சர கப்புகொட	நிரலாக்கல் உதவியாளர்	21.02.2022
திரு. W. விஹங்க தத்சர	நிரலாக்கல் உதவியாளர்	21.02.2022
திருமதி ஹன்சனி எரங்கா	நிரலாக்கல் உதவியாளர்	21.02.2022
திரு. இசுர ரணவக்க	நிரலாக்கல் உதவியாளர்	21.02.2022
திருமதி J.S.M. பெரேரா	பல நோக்கு அபிவிருத்தி உதவியாளர் - பணி உதவியாளர்	21.04.2022
செல்வி P.M. செவ்வந்தி	பகல் நேர குழந்தைகள் காப்பக உதவியாளர்	01.08.2022
செல்வி அருண கிறிஷ்டெல்லா சந்ரன்	நிரலாக்கல் உதவியாளர்	01.09.2022
செல்வி T.H. ஷெனாலி ஷெஹானா	நிரலாக்கல் உதவியாளர்	01.09.2022
செல்வி H.R. நதீஜா பிரசாதினி	நிரலாக்கல் உதவியாளர்	01.09.2022

சமரவீர		

ஒப்பந்த அடிப்படை / பணி ஒப்படை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்களைப் புதுப்பித்தல்

பெயர்	பதவி	நியமனத் திகதி
திருமதி D.M. ஆரியரத்ன	சிரேஷ்ட பதவிநிலை உதவியாளர்	01.10.2021 - 28.02.2022 **(ஒப்பந்தக் காலம் முடிவடையும் திகதி - 28.02.2022)**
திருமதி L.K. வீரகல	சிரேஷ்ட பதவிநிலை உதவியாளர்	03.09.2021 - 02.02.2022 07.02.2022 - 06.05.2022 **(ஒப்பந்தக் காலம் முடிவடையும் திகதி - 06.05.2022)**
திரு. W. விஹங்க தத்சர	நிரலாக்கல் உதவியாளர்	21.02.2022 - 20.07.2022 25.07.2022 - 24.08.2022 **(24.08.2022 ஆம் திகதி இராஜினாமா)**
செல்வி அருண கிறிஷ்டெல்லா சந்ரன்	நிரலாக்கல் உதவியாளர்	01.09.2022-31.01.2023 **(26.10.2022 ஆம் திகதி இராஜினாமா)**
செல்வி T.H.I. கயத்ரி	தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர்	06.10.2021 - 05.10.2022 10.10.2022 - 09.10.2023 **(05.12.2022 ஆம் திகதி இராஜினாமா)**
திருமதி M.D.I. புஷ்பகுமாரி	முகாமைத்துவ உதவியாளர்	01.11.2021 - 31.03.2022 05.04.2022 - 04.07.2022 07.07.2022 - 06.10.2022 11.10.2022 - 10.01.2023 **(15.12.2022 ஆம் திகதி இராஜினாமா)**
செல்வி D.K.H.K. களுஆரச்சி	முகாமைத்துவ உதவியாளர்	01.11.2021 - 31.03.2022 05.04.2022 - 04.07.2022 07.07.2022 - 06.10.2022 11.10.2022 - 10.01.2023

செல்வி S.Y.S. சமரகே	முகாமைத்துவ உதவியாளர்	01.11.2021 - 31.03.2022 05.04.2022 - 04.07.2022 07.07.2022 - 06.10.2022 11.10.2022 - 10.01.2023
திரு. L.G.D.M.U. சமரவிக்ரம	முகாமைத்துவ உதவியாளர்	01.11.2021- 31.03.2022 05.04.2022 - 04.07.2022 07.07.2022 - 06.10.2022 11.10.2022 - 10.01.2023
திரு. R.S.M. வீரசிங்க	தொழில்நுட்ப அலுவலர் (ஒலிக் காட்சி)	22.12.2021 - 21.05.2022 25.05.2022 - 24.10.2022 27.10.2022 - 26.01.2023
திருமதி ஹன்சனி எரங்கா	நிரலாக்கல் உதவியாளர்	21.02.2022 - 20.07.2022 25.07.2022 - 24.10.2022 27.10.2022 - 26.01.2023
திரு. இசுர ரணவக்க	நிரலாக்கல் உதவியாளர்	21.02.2022 - 20.07.2022 25.07.2022 - 24.10.2022 27.10.2022 - 26.01.2023
திரு. K.G. மானெத் மெத்சர கப்புகொட	நிரலாக்கல் உதவியாளர்	21.02.2022 - 20.07.2022 25.07.2022 - 24.10.2022 27.10.2022 - 26.01.2023
செல்வி T.H. ஷெனாலி ஷெஹ்ரானா	நிரலாக்கல் உதவியாளர்	01.09.2022-31.01.2023
செல்வி H.R. நதீஜா பிரசாதினி சமரவீர	நிரலாக்கல் உதவியாளர்	01.09.2022-31.01.2023
திருமதி H.P. அமரதுங்க	சிரேஷ்ட பதவிநிலை உதவியாளர் (சிறாப்பர்)	01.09.2021 - 31.01.2022 03.02.2022 - 02.05.2022 06.05.2022 - 05.08.2022 10.08.2022–09.11.2022 14.11.2022 - 13.02.2023
செல்வி P.V.G.U.I.A. சமரவிக்ரம	முகாமைத்துவ உதவியாளர்	17.12.2021 - 16.05.2022 19.05.2022 - 18.08.2022 23.08.2022 - 22.11.2022 25.11.2022 - 24.02.2023
செல்வி P.R.N.D. பொல்கம்பொல	முகாமைத்துவ உதவியாளர்	24.09.2021 - 23.02.2022 28.02.2022 - 27.05.2022 01.06.2022 - 31.08.2022 05.09.2022 - 04.12.2022 08.12.2022 - 07.03.2023
செல்வி P.M. செவ்வந்தி	பகல் நேர குழந்தைகள் காப்பக உதவியாளர்	01.08.2022 - 31.12.2022 04.01.2023 – 03.04.2023

செல்வி R.T.E.M.M. பபசர குமாரி புஸ்ஸெகொட	முகாமைத்துவ உதவியாளர்	30.12.2021 - 29.05.2022 06.06.2022 - 05.11.2022 14.11.2022 - 13.05.2023
செல்வி N.H.G.T. மதுஷானி	தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர்	09.11.2021 - 08.11.2022 11.11.2022 - 10.11.2023

*அரசாங்கத்தினால் நிரந்தரப் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் இடைநிறுத்தப்பட்டிருப்பதன் காரணமாக PGIM இனால் மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்த அடிப்படை / பணி ஒப்படை அடிப்படையில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆளணி அபிவிருத்தி

மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கீழ் குறிப்பிடப்படும் ஆளணி அங்கத்தவர்கள் மீளாய்வாண்டின்போது பல்வேறு பயிற்சித் திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டனர்

பெயரும், பதவிப் பெயரும்	பயிற்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி வழங்கப்பட்ட இடம்
செல்வி L.P. தொட்டவத்த	சுய விபரக் கோவை பராமரிப்பு	வ.ப. திறன் அபிவிருத்தி நிதியம்
செல்வி D.D.M.A. குணரத்ன	Microsoft Office Corporate பயிற்சி	வ.ப. திறன் அபிவிருத்தி நிதியம்
செல்வி L.H. திமேஷா	Microsoft Office Corporate பயிற்சி	வ.ப. திறன் அபிவிருத்தி நிதியம்
செல்வி D.S.A.S.L. சமரசிங்க	Microsoft Office Corporate பயிற்சி	வ.ப. திறன் அபிவிருத்தி நிதியம்
திருமதி K.G.P.S. குமாரி	Microsoft Office Corporate பயிற்சி	வ.ப. திறன் அபிவிருத்தி நிதியம்
திருமதி O.V. வாசனா டயஸ்	Microsoft Office Corporate பயிற்சி	வ.ப. திறன் அபிவிருத்தி நிதியம்
திரு. R.K.V.M. ரூபசிங்க	Microsoft Office Corporate பயிற்சி	வ.ப. திறன் அபிவிருத்தி நிதியம்
செல்வி S.S. ரணசிங்க	Microsoft Office Corporate பயிற்சி	வ.ப. திறன் அபிவிருத்தி நிதியம்
திரு. C.M. ஜயகொடி	Microsoft Office Corporate பயிற்சி	வ.ப. திறன் அபிவிருத்தி நிதியம்
செல்வி M.S. ஜயசிங்க	Microsoft Office Corporate பயிற்சி	வ.ப. திறன் அபிவிருத்தி நிதியம்
செல்வி H.M.K.S. ஹேரத்	செயலாற்றுகை முகாமைத்துவம் மற்றும் KPIs தயாரிப்பு	மெட்ரொபொலிட்டன் கெம்பஸ்

பதவி உயர்வுகள்

பெயர்	பதவி உயர்வுத் தரங்கள்	திகதி
செல்வி H.N.L. ஹேவாகம	நூலக தகவல் உதவியாளர் - தரம் I	10.01.2022 (*19.02.2020)
செல்வி W.M.N.M. வனிகசேக்கர	நூலக தகவல் உதவியாளர் - தரம் II	10.01.2022 (*01.04.2020)
செல்வி A.H.T.H.R. நிகேத்தனி	நூலக தகவல் உதவியாளர் - தரம் II	10.01.2022 (*01.04.2020)
செல்வி D.N.D. திசாநாயக்க	பதவிநிலை முகாமைத்துவ உதவியாளர்	30.05.2022 (*15.09.2021)
திரு. M.D.K. ரங்க	தொழில்நுட்ப அலுவலர் – தரம் II பிரிவு A	30.05.2022 (*03.11.2021)
திரு. W.N.S. குமார	பணி உதவியாளர் - விசேட தரம் I	31.05.2022 (*01.08.2021)
செல்வி K.C. பிரதீபிக்கா	சிரேஷ்ட பதவிநிலை முகாமைத்துவ உதவியாளர்	06.06.2022 (*01.01.2022)
திரு. R.A.K. தினிருக்ஷன	சிரேஷ்ட பதவிநிலை முகாமைத்துவ உதவியாளர்	06.06.2022 (*22.07.2021)
செல்வி A.D.C. உமங்கலீ	முகாமைத்துவ உதவியாளர் தரம் I	06.06.2022 (*01.01.2022)
செல்வி G.A.K. பந்துமதீ	சிரேஷ்ட பதவிநிலை முகாமைத்துவ உதவியாளர்	06.06.2022 (*22.07.2021)
திரு.G.H.L. இஷன்க	முகாமைத்துவ உதவியாளர் தரம் II	20.09.2022 (*01.07.2020)
திரு.W.B.S. பண்டார	முகாமைத்துவ உதவியாளர் தரம் II	20.09.2022 (*05.06.2020)
செல்வி W.M.C.S குமாரி	முகாமைத்துவ உதவியாளர் தரம் II	20.09.2022 (*01.08.2021)
செல்வி H.H.K. M மதூஷிகா	முகாமைத்துவ உதவியாளர் தரம் II	20.09.2022 (*05.06.2021)

* பதவி உயர்வு செயல்வலுப்பெறும் திகதி

இடமாற்றல்கள்

பெயர்	பதவி	இடமாற்றப்பட்ட இடம்	திகதி
செல்வி H.N.L. ஹேவாகம	நூலக தகவல் உதவியாளர் - தரம் II	பேராதனை பல்கலைக்கழகம்	01.02.2022
திரு. M.D.K. ரங்க	தொழில்நுட்ப அலுவலர் – தரம் II பிரிவு B	மொரட்டுவை பல்கலைக்கழகம்	15.03.2022

பதவி உயர்வு காரணமாக மேற்கொள்ளப்பட்ட இடமாற்றல்கள்

பெயர்	பதவி	இடமாற்றப்பட்ட இடம்	திகதி
திரு. T. புண்ணியமூர்த்தி	முகாமைத்துவ உதவியாளர் தரம் - III	கொழும்புப் பல்கலைக்கழகம்	15.12.2022

வெளிநாட்டு விடுமுறை (கடமை சார்ந்த) - இல்லை

ஓய்வு விடுமுறை

பெயர்	பதவி	ஓய்வு விடுமுறை காலப் பகுதி
திருமதி W.A.L விக்கிரமசிங்க	பிரதி நிதி நிர்வாகி	01.07.2022 – 10.04.2023
கலாநிதி P.A. சிறிபத்தன	சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் II	10.10.2022 – 09.06.2023

ஓய்வுபெறல்

பெயர்	பதவி	ஓய்வு பெற்ற திகதி
திருமதி T.M.T.G. டி சில்வா	சிரேஷ்ட பதவிநிலை உதவியாளர் (தரவு உட்படுத்தல் இயக்குனர்)	31.12.2022

கேட்டு விலகல்கள் (இராஜினாமா)

பெயர்	பதவி	திகதி
செல்வி P. ராஜபத்திரண	சிரேஷ்ட பதவிநிலை முகாமைத்துவ உதவியாளர்	02.01.2022
செல்வி N.B.M. வலிசிங்க	முகாமைத்துவ உதவியாளர் - தரம் III	20.05.2022
திருமதி K.K. குமுதினி	பணி மேற்பார்வையாளர் (சிவில்) - தரம் II	29.05.2022
திருமதி W.K.N.S. குமாரி	உதவி நிதி நிர்வாகி	20.06.2022
திரு. W. விஹங்க தத்சர	நிரலாக்கல் உதவியாளர் (ஒப்பந்த அடிப்படை)	24.08.2022
Ms. அருண கிறிஷ்டெல்லா சந்ரன்	நிரலாக்கல் உதவியாளர் (ஒப்பந்த அடிப்படை)	26.10.2022

செல்வி T.H.I. கயத்ரீ	தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர்	05.12.2022
திருமதி M.D.I. புஷ்பகுமாரி	முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்த அடிப்படை)	15.12.2022
திரு. E.D.V. டி சில்வா	தொழில்நுட்ப அலுவலர் (ICT த.தொ.தொ.))	26.12.2022

14.5 நிதிசார் தகவல்கள்

2022 திசெம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

14.5.1 அறிக்கையிடல் நிறுவனம்

PGIM என்பது இலங்கையில் மருத்துவர்களின் நிபுணத்துவப் பயிற்சிக்கு பொறுப்பான ஒரே நிறுவனமாகும். இது கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த ஒரு தேசிய நிறுவனம் ஆகும். இது சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் சில பயிற்சித் திட்டங்களுக்கு இங்கிலாந்தின் ரோயல் கல்லூரிகளால் 'சமமான' அங்கீகாரம் கிடைத்துள்ளது.

PGIM ஆனது உயர்கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, பல்கலைக்கழகங்கள் மற்றும் மருத்துவ பீடங்கள் மற்றும் தொழிற் கல்விக் கல்லூரிகள் ஆகியவற்றுடன் நெருக்கமான நெருக்கமான வகையிலான ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்கின்றது. சுகாதார அமைச்சு மற்றும் உயர்கல்வி அமைச்சின் செயலாளர்கள், மருத்துவ சேவைகள், பணிப்பாளர் நாயகம் அனைத்து மருத்துவ பீடங்களின் பீடாதிபதிகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள புகழ்பெற்ற நிபுணர்களில் பெயர் குறிப்பிடப்பட்ட ஏழு பேர் முகாமைத்துவ சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

தூரநோக்கு

இந்நாட்டினதும் பிராந்தியத்தினதும் சுகாதாரத் தேவையை நிறைவு செய்து உலக சுகாதாரத் துறைக்கு பங்களிப்புச் செலுத்துமுகமாக உயர் திறமை மிக்க சிறந்த நிபுணர்களையும் ஏனைய தொழில் வல்லுனர்களை உருவாக்குவதில் தனிச் சிறப்புமிக்க சர்வதேச அங்கீகாரம் பெற்ற மையமாகப் பரிணமித்தல்.

செயற்பணி

இலங்கை மக்களுக்கும், பிராந்தியம் மற்றும் உலகிற்கு மிகச் சிறந்த மனிதாபிமான சுகாதார உபசரிப்பை வழங்குவதற்காக உயர் தரம் மிக்க, தேர்ச்சி மற்றும் அர்ப்பணிப்புள்ள சிறப்பு நிபுணர்கள் மற்றும் ஏனைய தொழில் வல்லுனர்களை உருவாக்குவதற்குத் தேவையான பட்டப்பின் படிப்பு கல்வி சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடல் மற்றும் மேம்பாடு, செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

14.5.1(i) வெளியீட்டிற்கான அங்கீகாரம் தேதி

கொழும்பு மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கான அங்கீகாரம் 11.02.2023 திகதி முகாமைத்துவ சபையினால் வழங்கப்பட்டது.

14.5.1(ii) அறிக்கையிடல் காலம்

நிறுவனத்தின் நிதிசார் அறிக்கையிடல் காலம் 2022 ஜனவரி 01 முதல் 2022 டிசம்பர் 31 வரையானதாகும்.

14.5.2 கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

14.5.2 (i) இணக்கப்பாட்டுக் கூற்று

நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு *(SLPSAS)* இணங்க தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்குட்படாத பகுதிகளில் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்களில் நிதி நிலைமைக் கூற்று, நிதி செயலாற்றுகை கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, பங்கு மாற்றங்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ஆகியன உள்ளடங்கியுள்ளது.

14.5.2 (ii) அளவீட்டின் அடிப்படை

நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்து ஏற்புடையதாக இருக்கும். பணவீக்க காரணிகளுக்கான சீர்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. *2.12* இல் அறிக்கைப்படுத்தப்பட்ட மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கு குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் *3.4* இல் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள ஓய்வூதிய அனுகூலப் பொறுப்புக்கள் மற்றும் மீள் மதிப்பீட்டு அடிப்படையில் சொத்துக்களை இனங்கண்டுகொள்ளல் தவிர, நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் வரலாற்று அடிப்படையிலான கிரய அங்கீகாரத்தின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

14.5.2 (iii) ஒப்பீட்டுத் தகவல்கள்

நிறுவனத்தால் பின்பற்றப்படும் அனைத்து கணக்கீட்டுக் கொள்கைகளும் முந்தைய ஆண்டுடன் தொடர்புடையதாக இருப்பதுடன், இந்த ஆண்டிற்கான புள்ளவிபரங்களை சமர்ப்பிக்கும்போது தேவையான ஒப்பீட்டு ரீதியிலான எண்ணிக்கை வேறுபாடுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.

14.5.2 (iv) பொருள் சார்ந்த மற்றும் சேகரிப்பு

சமமான உருப்படிகளில் அனைத்து வகைகளும் நிதிக் கூற்றுக்களில் தனித் தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சமமற்ற தன்மை அல்லது செயல்பாட்டின் உருப்படிகள் பொருள் சார்ந்தவை தவிர தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

14.5.2 (v) ஈடு செய்தல்

SLPSAS இனால் தேவைப்படும் அல்லது அனுமதிக்கப்பட்டிருந்தாலே தவிர சொத்துக்கள், பொறுப்புகள், வருமானங்கள் மற்றும் செலவுகள் ஈடுசெய்யப்படவில்லை

14.5.2 (vi) தொடர்ச்சியான இருப்பு

PGIM இன் நிலைத்திருப்புக்கான ஆற்றல் மதிப்பிட்டுள்ளது. நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினால் எதிர்பார்க்க முடியுமான எதிர்கால இருப்புக்குப் போதுமானளவு வளங்கள் நிறுவகத்திடம் இருக்கின்றதென்ற நியாயமான எதிர்பார்ப்பு உண்டு. எதிர்காலத்தைப் பற்றிய அனைத்து தகவல்களையும் கவனத்திற்கொள்ளும்போது கலைத்துவிடல் அல்லது செயல்பாடுகளை நிறுத்துவதற்கான தேவையை பல்கலைக்கழகம் எதிர்பார்க்கவில்லை. அதற்கமைய, நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது *PGIM* தொடர்ச்சியான இருப்பு அடிப்படையைப் பின்பற்றுகின்றது.

14.5.2 (vii) அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர், அறிக்கையிடப்படும் திகதி மற்றும் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட திகதிக்கிடையில் இடையில் நிகழும் சாதகமான மற்றும் சாதகமற்ற நிகழ்வுகள் எனும் இரண்டு நிகழ்வுகளை இனங்கண்டுகொள்ள முடியும்.

அ. அந்த நிகழ்வுகள் அறிக்கைப்படுத்தும்போது நிலவிய நிபந்தனைகள் பற்றிய சான்றுகள் வழங்கப்படுகின்றன. (அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னரான நிகழ்வுகளை சீர்படுத்தல்)

ஆ. அவை அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட நிலைமையைக் குறிக்கின்றது. (அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னரான நிகழ்வுகளை சீர்படுத்தாமை)

அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர் அனைத்து முக்கிய நிகழ்வுகளும் பரிசீலிக்கப்பட்டுஇ நிதிக் கூற்றுக்களில் பொருத்தமான மாற்றங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டன.

14.5.2 (viii) செயற்பாட்டு மற்றும் பயன்படுத்திக்கொள்ளப்படும் நாணயம்

***PGIM* இன் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்கள் (உருப்படிகள்) *PGIM* செயல்படும் முதன்மை பொருளாதார சூழலின் நாணயத்தை (செயற்பாட்டு நாணயம்) பயன்படுத்தி அளவிடப்படுகிறது. இந்த நிதிக்கூற்றுக்கள் *PGIM* இன் செயற்பாட்டு மற்றும் பயன்படுத்திக்கொள்ளப்படும் நாணயமான 'இலங்கை ரூபாயில்' (ரூ.) தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது.**

14.5.2 (ix) *வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் நிலுவைகளின் பரிவர்த்தனை*

வெளிநாட்டு நாணய அலகினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்பட்ட திகதிகளில் நிலவிய நாணய மாற்று வீத அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்பட்ட இலாபம் மற்றும் நட்டங்கள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் கொடுக்கல் வாங்கலினால் ஏற்படும் இலாபம் மற்றும் நட்டம் வருமானக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படும்.

14.5.2 *(x)* கிட்டிய தசமத்திற்கு வரையறுத்தல்

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களினால் அனுமதிக்கப்படும் வேறு வகையில் சுட்டிக்காட்டப்பட்டவை தவிர, நிதிக் கூற்றுக்களில் தொகைகள் கிட்ட தசமத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

14.5.2 (xi) வரவு செலவுத் திட்ட வரையறைகள் (கட்டுப்பாடுகள்)

திறைசேரி மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவினால் (UGC) வெளியிடப்பட்ட நிதிசார் ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டல்களின் அடிப்படையில் *PGIM* இன் வருடாந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. *2022* ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியிலிருந்து உண்மையான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு பெறப்படாததால், *PGIM* இனால் உள்ளக அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட (ஈட்டிய) நிதி மூலம் அதன் செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டியேற்பட்டது.

வரவு செலவுத் திட்டம் *2022* ஜனவரி *01* முதல் *2022* டிசம்பர் வரையிலான நிதிசார காலப் பகுதியை உள்ளடக்குகின்றது. வரவு செலவுத் திட்டத்தின் மட்டுப்பாடுகள் பற்றிய கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற உண்மையான அளவுகள் அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ளன.

14.5.2 (xii) சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் (PPE)

PGIM இன் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியன காணிகள், கட்டிடங்கள், ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள், நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள், மோட்டார் வாகனங்கள், பட்டதாரி அங்கிகளை உள்ளடக்குகின்றது.

14.5.2 (xii) (a) மதிப்பீடு செய்யும் அடிப்படை

பொருளுடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதாரப் பலன்கள் அந்த நிறுவனத்திற்கு கிடைப்பதற்கான வாய்ப்பு இருப்பின் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ளதுடன் பொருளின் கிரயத்தை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும்.

- ***அடிப்படை இனங்காணல்***

ஆரம்பத்தில் சொத்துக்கள்இ பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் சொத்துக்களை அதன் பயன்படுத்துவதற்கான நிலைமைக்கு கொண்டுவரும்போது ஏற்படும் எந்தவொரு எழுமாறான செலவுகளுடன் கொள்வனவுச் செலவு உட்பட அதன் எதிர்பார்க்கும் பயன்பாட்டிற்கான ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் இனங்கண்டுகொள்ளப்படுகின்றது மற்றும் PPE குறைந்த திரட்டிய தேய்மானம் மற்றும் திரட்டிய பலவீனங்களினால் அளவிடப்படுகின்றது.

• தற்போதுள்ள சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான அடுத்தடுத்த செலவுகள்

உறுதியான சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமானது பின்வரும் அளவுகோல்களில் ஒன்றைப் பூர்த்தி செய்தாலே தவிர அது மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியினுள் நிதிச் செயலாற்றுகை கூற்றுக்கு அறவிடப்படும். இந்த சந்தர்ப்பத்தில் அது மூலதனமாக்கப்பட்டு தொடர்புடைய பயனுள்ள வாழ்நாள் முழுவதும் தேய்மானத்திற்குட்படுத்தப்படுகின்றது.

- சொத்தின் இயலளவை அதிகரித்தல்.

- வெளியீட்டின் தரத்தில் கணிசமான முன்னேற்றம் அல்லது செயற்பாட்டுச் செலவைக் குறைத்தல்.

- பழுது மற்றும் பராமரிப்பு மூலம் உறுதிசெய்யப்பட்ட சொத்துக்களின் ஆயுட்காலத்தை கணிசமான அளவினால் நீடித்தல்.

- PPE இன் சந்தை ப் பெறுமதி பின்னர் அதிகரித்துள்ளது.

- ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட செயலாற்றுகை தரநிலையிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார அனுகூலங்களை மறுசீரமைத்தல் அல்லது பராமரித்துப் பேணி வருவதற்காக சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பழுதுபார்ப்பு அல்லது பராமரிப்புக்கான செலவை ஏற்படும் போதான செலவாக அங்கீகரிக்கப்படுகிறது.

- ***இனங்கண்டுகொள்ளப்பட்டதன் பின்னரான அளவீடு***

கிரய மாதிரி

இனங்கண்டுகொள்ளப்பட்டதன் பின்னர் காணிகள், கட்டிடங்கள், மோட்டார் வாகனங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், ஏனைய உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் துணைப் பாகங்கள் ஆகிய வகுப்புகளைத் தவிர அனைத்து PPE களும் அதன் செலவில் குறைந்த திரட்டிய தேய்மானத்தின் கீழ் கொண்டு செல்லப்படுகின்றன.

மீள் மதிப்பீட்டு மாதிரி

கீழே குறிப்பிடப்பட்டுள்ள PPE வகைகளை இனங்கண்டுகொண்டதன் பின்னர் நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமான நியாயமான பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்பட்ட அளவுகளினால் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், அது மீள் மதிப்பீட்டுத் திகதியன்று தேதியில் நியாயமான மதிப்பாக இருப்பதுடன்,

பின்னர் திரட்டிய தேய்மானம் மற்றும் பின்னர் திரட்டிய நட்டம் குறைக்கப்படும். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பத் தகைமை பெற்ற உறுப்பினர்கள் உட்பட PGIM முகாமைத்துவக் குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் பின்வரும் சொத்துக்களை மறுமதிப்பீடு செய்வதே PGIM இன் கொள்கையாகும்.

காணிகள் மற்றும் கட்டிடங்கள்,

மோட்டார் வாகனங்கள்,

தளபாடங்கள் மற்றும் துணைப்பாகங்கள்

அலுவலக உபகரணங்கள்

ஆய்வுகூடங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்,

நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ கால சஞ்சிகைகள்

ஆடையணிகள்

மின் விநியோகம்

PPE மற்றும் அருவச் சொத்துகளின் கொண்டு செல்லப்படும் பெறுமதி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன், அத்தகைய அறிகுறிகள் ஏதேனும் இருந்தால், ஏதேனும் சேதங்கள் சம்பந்தமாக அறிகுறிகள் உள்ளதா என்பதைத் தீர்மானிக்கப்படுகின்றது. அப்போது மீட்டெடுக்க முடியுமான சொத்துக்கள் மதிப்பிடப்படுகிறது. சொத்துக்களின் ஏற்புப் பெறுமதியானது அதன் மீட்டெடுக்கக்கூடிய தொகையை விட அதிகமாக இருந்தால் சேதமானது நட்டமாக இனங்கண்டுகொள்ளப்படும். நிதி செயலாற்றுகை கூற்றில் குறைபாடு இழப்புகள் இனங்கண்டுகொள்ளப்படுகின்றன.

- *நூலகப் புத்தகங்கள் மற்றும் பட்டதாரி அங்கிகள்*

நூலக புத்தகங்கள் மற்றும் பட்டதாரி அங்கிகளின் விலை 5 வருட காலத்திற்கு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படுகிறது.

- **அருவச் சொத்துக்கள்**

சொத்துக்களுக்கு ஏற்புடையதாக்கிக்கொள்ள முடியுமான எதிர்காலப் பொருளாதார அனுகூலங்கள் தொழில் முயற்சிகளுக்கு வருவதற்கு வாய்ப்பிருக்கும்போது மற்றும் சொத்தின் கிரயத்தை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும்போது கணனி மென்பொருள் (சொப்ட்வெயார்) மற்றும் இணையவழி ஜர்னல்கள் மற்றும் இலத்திரனியல் புத்தகங்கள் அருவமான சொத்துகளாக இனங்கண்டுகொள்ளப்படும். கையகப்படுத்தப்பட்ட அருவ சொத்துக்கள் குறைந்த செலவில் திரட்டப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் திரட்டிய பெறுமதி தேய்மானம் மற்றும் திரட்டிய சேதங்கள் நட்டங்கள் ஊடாக வெளியிடப்படுகின்றது. இந்த செலவுகள் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கையின் மீது குறைக்கப்படுகின்றன. பயனுள்ள வாழ்க்கையின் அடிப்படையில் பெறுமதி தேய்மானத்திற்குட்படுத்தப்பட்டுள்ளது. பயன்மிக்க வாழ்க்கை மற்றும் மற்றும் எஞ்சிய மதிப்புகள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வுக்படுத்தப்பட்டு பொருத்தமானதாக இருந்தால் சரிசெய்யப்படும்.

• வெளித் தரப்புக்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ள கட்டிடங்கள்.

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகமானது இலங்கை உள்ளக மருத்துவக் கல்லூரி (SLCIM), இலங்கை இரைப்பைக் குடலியல் சங்கம் (SLCGE) மற்றும் நோயியல் நிபுணர்கள் கல்லூரி (COP) ஆகிய தொழில்சார் கல்லூரிகளுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கல்வி மையத்தில் அமைந்துள்ள இடங்களை குத்தகைக்கு வழங்கியுள்ளது. இந்த ஏற்பாட்டின் மூலம் PGIM மற்றும் தொடர்புடைய தொழில்சார் அமைப்புக்களுக்கு பரஸ்பர அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாகியுள்ளதுடன் அது தவிர PGIM இன் பயன்பாடுகளுக்கான செலவு குறைக்கப்பட்டுள்ளது. இந்த சொத்துக்கள் வாடகை அல்லது மூலதன மதிப்பை ஈட்டுவதற்காக வைத்திருக்கவில்லையென்பதனால் இந்த சொத்துக்கள் முதலீட்டு சொத்துக்கள் என வகைப்படுத்தப்படவில்லை, அதற்கமைய இந்த சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றுக்களில் PPE என வகைப்படுத்தப்படுகின்றன.

14.5.2 (xii) (b) தேய்மானம்

அறுதியுறுதி காணிகள் தவிர *PPE* உருப்படியொன்றின் ஒவ்வொரு கூறுகளிலும் நேர்கோட்டின் அடிப்படையில் நிதிச் செயலாற்றுகை கூற்றில் தேய்மானம் இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

சொத்தொன்றின் தேய்மானமானது அது பயன்படுத்தப்படும்போது ஆரம்பமாகிறது மற்றும் சொத்து விற்பனைக்கு வைக்கப்பட்டதாக வகைப்படுத்தப்பட்ட திகதிக்கு முன்னர் மற்றும் சொத்து இனங்கண்டுகொள்ளப்படாத திகதிக்கு முன்னர் நிறுத்தப்படும்.

மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட் காலங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

சொத்துக்கள் வகை	மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம்
கட்டிடங்கள்	20 வருடங்கள்
தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்	10 வருடங்கள்
ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்	05 வருடங்கள்
அலுவலக உபகரணங்கள்	05 வருடங்கள்
மோட்டார் வாகனங்கள்	05 வருடங்கள்
கணனி மற்றும் துணைப்பாகங்கள்	05 வருடங்கள்
மின்சார விநியோகம்	
பிரிப்புக்கள் மற்றும் உள் வேலைகள்	05 வருடங்கள்
நில எழிலமைப்பு	05 வருடங்கள்
இணைய சஞ்சிகைகள்	01 வருடம்
கணனி மென்பொருள்கள்	05 வருடங்கள்
நூலகப் புத்தகங்கள்	05 வருடங்கள்
பட்டதாரி அங்கிகள்	05 வருடங்கள்
இ - நூல்கள்	தள மையத்தின் செல்லுபடியாகும் காலம்

சொத்துகளின் எஞ்சிய மதிப்புகள் மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு பொருத்தமானதாக இருந்தால் தயாரிக்கப்படும். ஒவ்வொரு அறிக்கைப்படுத்தல் காலப்பகுதியின் இறுதியில் சொத்தின் சுமந்து செல்லும் பணப் பெறுமதி அதன் மதிப்பீடு செய்யப்பட்ட அறவிட்டுக்கொள்ள முடியுமான தொகையைப் பார்க்கிலும் அதிகமாக இருந்தால், அதன் மீட்டெடுக்கக்கூடிய தொகைக்கு உடனடியாக எழுதப்படும்.

புறத்தொதுக்கும்போது கிடைக்கும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஈட்டல்களை சுமந்து செல்லும் தொகையுடன் ஒப்பிடுவதன் மூலமாக இருப்பதுடன் விரிவான வருமானக் கூற்றில் இலாபம் / (நட்டம்) இனங்கண்டுகொள்ளப்படுகின்றது.

14.5.2 (xii) (c) இனங்கண்டுகொள்ளல்

PPE சுமந்து செல்லும் அளவை புறத்தொதுக்கும்போது அல்லது அதனை பயன்பாட்டிலிருந்து அல்லது புறத்தொதுக்குவதனூடாக எதிர்காலத்தில் பொருளாதார அனுகூலங்கள் அல்லது சேவை வாய்ப்புக்கள் எதிர்பார்க்கப்படாதபோது இனங்காணப்படவில்லை. இனங்காணப்படாமையினால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டத்தை இனங்காணப்படாதபோது மேலதிகம் அல்லது பற்றாக்குறையில் உள்ளடக்கதல் வேண்டும்.

நடைமுறைச் சொத்துக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் வகைப்படுத்தப்பட்ட தற்போதைய சொத்துக்கள் என்பது நிறுவனத்தின் சாதாரண தொழிற்பாட்டு வட்டத்தினுள் அடைந்துகொள்வதற்கு அல்லது நுகர்வுக்காக எதிர்பார்ப்பவைகளை அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர் 12 மாதங்களுக்குள் காசு மற்றும் காசுக்குச் சமமான தொகையொன்றை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்ப்பவைகளாகும்.

14.5.3 (i) *இருப்புக்கள்*

	கட்டளை இல.	விடயம்	நிறுவனத்தின் பெயர்	மொத்தத் தொகை (15% வற் வரியுடன்)
1	PGIM/SUP/104/2022-Rec	பரீட்சை உருப்படிகள்	Biomedite (Pvt) Ltd	91,655.00
2	PGIM/SUP/105/2022-Rec	பரீட்சை உருப்படிகள்	Hemsons International (Pvt) Ltd	20,579.25
3	PGIM/SUP/106/2022-Rec	பரீட்சை உருப்படிகள்	Avon Pharmo Chem (Pvt) Ltd	25,144.75
4	PGIM/SUP/107/2022-Rec	பரீட்சை உருப்படிகள்	Microtech Biological (Pvt) Ltd	134,090.00
5	PGIM/SUP/108/2022-Rec	பரீட்சை உருப்படிகள்	Hemsons International (Pvt) Ltd	57,074.50
6	PGIM/SUP/133/2022-Rec	பரீட்சை உருப்படிகள்	Biomedite (Pvt) Ltd	1,169,932.20
7	PGIM/SUP/134/2022-Rec	பரீட்சை உருப்படிகள்	Hemsons International (Pvt) Ltd	105,898.25
8	PGIM/SUP/135/2022-Rec	பரீட்சை உருப்படிகள்	Microtech Biological (Pvt) Ltd	37,145.00
9	PGIM/SUP/137/2022-Rec	Papyrus காகிதங்கள்	Papyrus Papers (Pvt) Ltd	71,875.00
10	PGIM/SUP/138/2022-Rec	வர்ண ரோனர்கள் (Panthum)	EWIS Peripherals (Pvt) Ltd	234,600.00
				1,947,993.95

வெளிப்படுத்தல் 02

எதிர்பாராத செலவுகள் மற்றும் பொறுப்புக்கள்

எதிர்பாராத செலவுகள் மற்றும் பொறுப்புக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

இல.	வழக்கின் விபரம்	விடயம்	குறிப்பு	முகாமைத்துவத்தின் கருத்து
எதிர்பாராத பொறுப்புக்கள்				
1	**நீதவான் நீதிமன்றம் B 492/01/14** திரு.துமிந்த ரொஹான் குணரத்ன, கல்வி சாரா ஆளணி	நீதவான் நீதிமன்றம்	நிலுவையிலுள்ளது - விண்ணப்பதாரியின் வேண்டுகோள் 1. மீள அமர்த்தல் 2. மீள சம்பளம் செலுத்தல் 3. நியாயமான இழப்பீடு	PGIM இற்கு சார்பாக வழக்குத் தீர்ப்பை பெற்றுக்கொள்வதற்காக முகாமைத்துவம் நிதமும் கண்காணிப்பை மேற்கொள்வதுடன் வழக்கின் தற்போதைய நிலைமைக்கமைய இழப்பீட்டின் பெறுமதியை மதிப்பீடு செய்ய முடியாது.
2	**LT 01/Add/20/2016** திரு.துமிந்த ரொஹான் குணரத்ன, கல்வி சாரா ஆளணி	தொழில் நியாய சபை PGIM கூட்டங்களுக்கு உணவு வழங்கியமைக்காக சில்லறைக் காசிலிருந்து செலுத்துவதற்கான விலைப்பட்டியல்களை மோசடியாக சமர்ப்பித்தல்	நீதவான் நீதிமன்ற வழக்கு முடியும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.	
3	**HC ALT 43/20** திரு. ஆர்.எம்.எம்.பி. ரணதுங்க, கல்வி சாரா ஆளணி	திரு ரணதுங்க தனது பிரதானியின் முன் அனுமதியின்றி அலுவலகத்திலிருந்து விலகி விடுமுறை பெற்றுக்கொள்ளாதிருப்பதனால் திரு. ரணதுங்க அவர்களை பணியிலிருந்து நிறுத்துவதற்கு LT இனால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீடு செய்தல். தற்போது அவருக்கு 63 வயதாக இருப்பதனால் மீண்டும் பணியில் அமர்த்துவதற்கு முடியாது. (அவர் ஓய்வு வயதை அடைந்துள்ளார்)	நிலுவையிலுள்ளது - விண்ணப்பதாரியின் வேண்டுகோள் 1. மீளமைப்பு அல்லது மீளமைப்புக்குப் பதிலாக வேறு ஏதேனும் செயற்படுத்தல் 2. பணி நிறுத்தக் காலப் பகுதிக்கான சம்பளம் 3. நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் நியாயமான இழப்பீடு	

வெளிப்படுத்தல் 03
தொடர்புடைய தரப்புக்களுடனான
கொடுக்கல் வாங்கல்கள்

2022 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சபை அங்கத்தவர்களுக்கு பின்வருமாறு ஊதியம் செலுத்தப்பட்டுள்ளது:

முகாமைத்துவ சபை அங்கத்தவர்கள்

மு.சபை அமர்வுகளுக்கான படிகள்	1,386,000.00
கற்கை சபை	855,329.89
விரிவுரை	48,500.00

	2,289,829.89
பணிப்பாளர்	6,061,425.57
பிரதிப் பணிப்பாளர்	6,089,670.08
பிரதிப் பதிவாளர்	2,639,313.90
பிரதி நிதி நிர்வாகி	2,718,971.74
பதில் நிதி நிர்வாகி	873,383.98
	20,672,595.16

வெளிப்படுத்தல் 04
நிதிக் கூற்றுக்களில் வரவு செலவுத் திட்ட தகவல்களை சமர்ப்பித்தல்.

வரவு செலவுத் திட்டம் மற்றும் உண்மையான செலவுகள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

ரூ.

	2022 திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம்	உண்மையான செலவு (காசு அடிப்படையில்)	உண்மையான செலவு (அட்டுறு அடிப்படையில்)
நாணயமாற்றுவீதம் அல்லாத பரிவர்த்தணைகள் மூலமான வருமானம் - நடைமுறை			
மீண்டெழும் செலவினங்களுக்கான அரசாங்க அளிப்பு	130,000,000	35,000,000	35,000,000
நாணயமாற்றுவீதம் அல்லாத பரிவர்த்தணைகள் மூலமான மொத்த வருமானம் - நடைமுறை	**130,000,000**	**35,000,000**	**35,000,000**
நாணயமாற்றுவீத பரிவர்த்தணைகள் மூலமான வருமானம் - நடைமுறை			
வட்டி வருமானம்	64,000,000	60,541,000	96,049,734
நானாவித வருமானங்கள்	530,216,000	523,491,000	532,464,149
மொத்த வருமானம் - நடைமுறை	**594,216,000**	**584,032,000**	**628,513,883**
நாணயமாற்றுவீதம் அல்லாத பரிவர்த்தணைகள் மூலமான வருமானம் - மூலதனம்			
மூலதனச் செலவினங்களுக்கான அரசாங்க அளிப்பு	12,000,000	-	-
நாணயமாற்றுவீதம் அல்லாத பரிவர்த்தணைகள் மூலமான மொத்த வருமானம் - மூலதனம்	**12,000,000**	-	-
மொத்த வருமானம்	**736,216,000**	**619,032,000**	**663,513,883**
செயற்பாட்டுச் செலவினங்கள் - நடைமுறை			
ஆளுக்கான வேதனாதிகள்	199,563,000	192,656,000	188,223,679
பிரயாணச் செலவுகள்	9,200,000	6,718,000	2,650,484

வழங்கல்கள்	22,000,000	17,236,000	15,619,410
பராமரிப்பு	10,000,000	5,330,000	7,337,549
ஒப்பந்த சேவைகள்	87,412,000	79,182,000	79,687,792
ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள்	188,958,000	172,060,000	158,411,137
பட்டப்பின் பயிற்சி செலவுகள்	70,000,000	68,569,000	67,624,637
பணிக்கொடை ஏற்பாடுகள்	6,283,000	6,283,000	(5,291,725)
மொத்த செயற்பாட்டுச் செலவினம்	**593,416,000**	**548,034,000**	**514,262,962**
செயற்பாட்டுச் செலவினங்கள் - மூலதனம்			
மூலதனச் செலவினம்	142,800,000	83,044,000	110,443,000
மொத்த செயற்பாட்டுச் செலவினம் - மூலதனம்	**142,800,000**	**83,044,000**	**110,443,000**
மொத்த செலவினம்	**736,216,000**	**631,078,000**	**624,705,962**

வெளிப்படுத்தல் 05

PGIM பிரதான வளாகம் அமைந்துள்ள (இல: 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு 07) காணியின் பெறுமதி 573,720,000/= (ஐநூற்று எழுபத்து மூன்று மில்லியன் எழுநூற்று இருபதாயிரம் ரூபா) பின்வரும் காரணங்களால் சொத்தொன்றாக கணக்குப் பதிவேடுகளில் சேர்க்கப்படவில்லை.

1. மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பெயருக்கு இது வரை காணி சட்டப்பூர்வமாக வழங்கப்படவில்லை.

2. PGIM இன் பெயரில் காணியைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை மாற்றத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டாலும், உரிமை மாற்றம் செய்யப்பட்ட காணி உரிமைப் பத்திரம் கிடைக்கப்பெறாமை.

உரிமை மாற்றம் செய்யப்பட்ட காணி உரிமைப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்துடன் PGIM இனால் உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

வெளிப்படுத்தல் 06

கடந்த ஆண்டில் தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட ரூ.161,169,651 பெறுமதிமிக்க சொத்துக்கள் இந்த ஆண்டில் கீழ்க்கண்டவாறு மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள்	75,523,258
அலுவலக உபகரணங்கள்	36,385,105
கணனிகள் மற்றும் வலையமைப்பு உபகரணங்கள்	49,261,288

2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான பங்கு மாற்றம் பற்றிய கூற்று

விபரம்	திரட்டப்பட்ட நிதியம் - மீண்டெழும்	திரட்டப்பட்ட நிதியம் - மூலதனம்	மீள்மதிப்பீட்டு இருப்பு	கட்டுப்படுத்தப்பட்ட/ நன்கொடை நிதியம்	பொது இருப்பு	செலவிடப்பட்ட மூலதன அளிப்பு	செலவிடப்படாத மூலதன அளிப்பு	அன்பளிப்பு மற்றும் நன்கொடை	பிறப்பிக்கப்பட்ட நிதியிலிருந்தான மூலதனச் செலவு	மொத்தம்
31.12.2020 திகதியன்று மீதி	-	-	320,000	11,402,390	164,853,406	1,778,759,994	42,517,524	35,226,256	530,755,938	2,563,835,508
முன்னைய ஆண்டின் சீர்படுத்துகை	-	-	-	-	(3,537,550)	-	-	-	-	(3,537,550)
பொறுப்புக்களுக்கான மிகை / குறைவு	-	-	-	-	15,343,776	-	-	-	-	15,343,776
நடப்பு ஆண்டிற்கான நிதி கிடைப்பனவு	-	-	-	3,538,291	-	-	31,000,000	-	-	34,538,291
மீள் மதிப்பீட்டு மேலதிகம்	-	-	30,500,000	-	-	-	-	-	-	30,500,000
நடப்பு ஆண்டின் மூலதன செலவினம்	-	-	-	-	-	32,620,041	(32,620,041)	-	-	-
உருவாக்கப்பட்ட நிதியத்தினூடாக மூலதன செலவினத்திற்கான பங்களிப்பு	-	-	-	-	(18,201,348)	-	-	-	18,201,348	-
கடந்த ஆண்டுகளுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள்	-	-	-	-	(402,000)	-	-	-	-	(402,000)
கைத்தேறாத காசோலைகள் - வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்படல்	-	-	-	-	4,764,293	-	-	-	-	4,764,293
பெறுமானத் தேய்வு - மூலதன அளிப்பு	-	-	-	-	-	(92,235,859)	-	-	-	(92,235,859)
கால எல்லைக்கான பற்றாக்குறை/(மேலதிகம்)	-	-	-	-	103,730,876	-	-	-	-	103,730,876
2021.12.31 ஆம் திகதியன்று மீதி (மீளக் குறிப்பிட முன்னர்)	**-**	**-**	**30,820,000**	**14,940,681**	**266,551,453**	**1,719,144,176**	**40,897,483**	**35,226,256**	**548,957,286**	**2,656,537,335**
SLPSAS 11 இற்கமைய மீள வகைப்படுத்தல் - திரட்டிய நிதியம் - மீண்டெழும்	266,551,453	-	-	-	(266,551,453)	-	-	-	-	-
SLPSAS 11 இற்கமைய மீள வகைப்படுத்தல் - திரட்டிய நிதியம் - மூலதனம்	-	2,344,225,201	-	-	-	(1,719,144,176)	(40,897,483)	(35,226,256)	(548,957,286)	-
கட்டிடங்கள் தேய்மானத்தின் கீழான சீர்படுத்தல்கள்	(29,844)	-	-	-	-	-	-	-	-	(29,844)
சீர்படுத்தல் - கூட்டுக clinical key தேய்மானம் 2019,2020 & 2021	11,913,943	-	-	-	-	-	-	-	-	11,913,943
சீர்படுத்தல் - சேமலாப நிதியக் கடன் மற்றும் இடர் கடன் தீர்த்தல்	(354,190)	-	-	-	-	-	-	-	-	(354,190)

Adjustment - Clinical key subscription fee for year 2021	(16,880,862)	-	-	-	-	-	-	-	-	(16,880,862)
சீர்படுத்தல் - Clinical key 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான பங்களிப்புத் தொகை	(26,437,004)	-	-	-	-	-	-	-	-	(26,437,004)
சீர்படுத்தல் - ஏலத்தில் விடப்பட்ட மற்றும் நன்கொடையாக வழங்கப்பட்ட சொத்துக்களின் தேறிய ஏட்டுப் பெறுமதி	(164,916)	-	-	-	-	-	-	-	-	(164,916)
சீர்படுத்தல் - கேட்போர்கூடத்தின் கதிரைகளின் தேய்மானம்	(840,377)	-	-	-	-	-	-	-	-	(840,377)
31.12.2021 ஆம் திகதியன்று மீதி (மீள குறிப்பிடப்பட்ட)	**233,758,203**	**2,344,225,201**	**30,820,000**	**14,940,681**	**-**	**-**	**-**	**-**	**-**	**2,623,744,085**
சீர்படுத்தல் - களஞ்சியசாலை முற்பணக் கணக்கின் பிழைகளை சரிசெய்தல்	(219,000)	-	-	-	-	-	-	-	-	(219,000)
களஞ்சியசாலை முற்பண பதிவழிப்பு சீர்படுத்தல்	(293,113)	-	-	-	-	-	-	-	-	(293,113)
முன்னைய ஆண்டின் சீர்படுத்தல்	32,250	-	-	-	-	-	-	-	-	32,250
அட்டுறு செலவுகளுக்கான மேலதிக செலவு	55,660	-	-	-	-	-	-	-	-	55,660
திரவநிலை சேதங்கள்	517,071	-	-	-	-	-	-	-	-	517,071
மீள் மதிப்பீட்டு மேலதிகம் - தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்	-	-	22,426,862	-	-	-	-	-	-	22,426,862
மீள் மதிப்பீட்டு மேலதிகம் - ஆய்வுகூடங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்	-	-	8,478,746	-	-	-	-	-	-	8,478,746
மீள் மதிப்பீட்டு மேலதிகம் - மென்பொருள்	-	-	641,331	-	-	-	-	-	-	641,331
முன்னைய ஆண்டுகளுடன் தொடர்படைய கொடுப்பனவுகள்	(1,256,445)	-	-	-	-	-	-	-	-	(1,256,445)
வரையறுக்கப்பட்ட மற்றும் அன்பளிப்பு நிதியங்களின்	-	-	-	53,205	-	-	-	-	-	53,205


மாற்றங்கள்										
காலப் பகுதிக்குரிய மேலதிகம் / (குறைவு)	128,573,480	(135,548,011)	-	-	-	-	-	-	-	(6,974,530)
31.12.2022 ஆம் திகதியன்று மீதி	**361,168,106**	**2,208,677,190**	**62,366,939**	**14,993,886**	**-**	**-**	**-**	**-**	**-**	**2,647,206,121**

புதிய அரசதுறை கணக்கீட்டு நியமங்கள் (SLPSAS 11) நாணயமாற்று அல்லாத பரிவர்த்தனை மீதான வருமானங்களை அங்கீகரித்தல் 2021 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 2022 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டது. இந்த நியமம் அரச துறை நிறுவனங்கள் தொடர்பில் 2018 ஜனவரி 1 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது. இடைக்கால ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த நியமங்களைப் பின்பற்றுவதற்கு மூன்று ஆண்டு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. PGIM கடந்த மூன்று வருடங்களில் இந்த நியமங்களுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் PGIM கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க முந்தைய ஆண்டின் கணக்குகளை மீண்டும் தயாரித்துள்ளது. தக்கவைத்துக்கொள்வதற்கான ஈட்டல்கள் மீதான தாக்கம் பின்வருமாறு.

2021 திசெம்பர் 31 ஆம் திகதியன்று சேமிப்பு மீதி	103,730,876
கழிக்க: மூலதன மானியத் தேய்மானம்	(91,466,409)
கூட்டுக: பெறப்பட்ட மூலதன அளிப்புக்கள்	31,000,000
கணக்கியல் பிழை திருத்தம்	(354,190)
கட்டிடத்தின் தேய்மானம்	(29,844)
Clinical key *பங்களிப்புக் கட்டணம்*-2021	(16,880,862)
Cilinical key *இற்கான பெறுமதி தேய்வு*- 2021	7,184,601
2021.12.31 ஆம் திகதியன்று தக்க வைத்துக்கொள்ளப்பட்ட ஈட்டல்கள்	**33,184,172**

மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் 2021 முதல் 2022 வரை உள்ளக அடிப்படையில் ஈட்டிய வருமானம்

	2021	2022
பதிவுக் கட்டணம்	35,978,000	40,488,850
கற்கை நெறிக் கட்டணம்	179,335,420	244,379,650
பரீட்சைக் கட்டணம்	140,197,745	166,504,300
ஏனையவை	83,732,956	158,955,884
மொத்தம்	**439,244,121**	**610,328,684**



15 <u>பேண்தகு அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட எதிர்கால எதிர்பார்ப்புக்கள் பற்றிய அறிக்கை</u>

சிறந்த உடலாரோக்கியம்மிக்க சமூகமொன்றைத் தோற்றுவிப்பதனூடாக இலங்கைக்கு பேண்தகு அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் நிபுணத்துவ மருத்துவர்களின் சேவையை மேம்படுத்துவதற்கு முயற்சி செய்து வருகின்றது.

மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகமானது தனது வளங்களை மிகவும் விளைதிறன் மற்றும் வினைத்திறன்மிக்க வகையில் பயன்படுத்துவதனூடாக மற்றும் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக தனது பங்காளித் தரப்புக்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்வதனூடாக தனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளும். மேலும், நிலவும் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரிப்பு, கொடுப்பனவுகள் மற்றும் தேய்மானத்தைக் குறைத்தலைப் போன்றே வீண்விரயத்தை தடுத்தல் ம்றறும் அதனூடாக நிலவும் வளங்களை நிறுவகத்தின் வாடிக்கையாளர்கள் / பங்காளிகளினால் எதிர்காலத்தில் பயன்படுத்திக்கொள்வதற்காக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் பொருத்தமான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய, எமது முக்கிய நோக்கம் நிபுணத்துவ மருத்துவர்களின் சேவையின் தரத்தை மேம்படுத்துவதுடன்நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற) தரமான நிபுணத்துவ மருத்துவரின் சேவையை வசதியான மற்றம் பயன்மிக்க வகையில் பெற்றுக்கொடுப்பதாகும்.

இதில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன எமது நிறுவகத்துடன் இணைந்து செயற்படுகின்றன. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக எமது நிறுவகம் ஒழுங்குபடுத்தும் இரண்டு அடையாளங்கள் காணப்படுகின்றன.

அதில் முதலாவது, தரமான மருத்துவக் கல்வியைப் பெற்றக்கொடுப்பதன் ஊடாக நிபுணத்துவ மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் முக்கியமானதொரு திருப்புமுனையாகும். இந்த அடையாளத்தை அடைந்துகொள்வதற்காக தரமான கல்வியை உறுதி செய்யுமுகமாக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் சில தரங்களை உருவாக்கியுள்ளது. இது சம்பந்தமாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சுகாதார சுகாதாரத்துறை சார்ந்த கேள்விக்குப் பொருத்தக்கூடிய வகையில் பட்டப்பின் படிப்புத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் தனித்தனிக் குழுக்களை நிறுவியுள்ளது.

இரண்டாவது திருப்புமுனை, நிபுணத்துவ மருத்துவர்களின் சேவை முன்னேற்றத்திற்கு அளிப்பதன் ஊடாக இந்த நாட்டு மக்களின் உடலாரோக்கியம் மற்றும் ஆயுட்காலத்தை அதிகரிப்பதும், அதனுடன் தொடர்பான முதியோர் மருத்துவத் திட்டங்கள், மானிட ஊட்டச்சத்துத் திட்டங்கள், குழந்தை சுகாதாரத் திட்டங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலதிகமாக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் பல்வேறு உடலாரோக்கியம் மற்றும் ஆயுட்காலம் தொடர்பான அம்சங்களை உள்ளடக்கிய பல்வேறு பட்டப்பின் படிப்பு பாடத் திட்டங்களை திருத்தியமைத்துள்ளது.

நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் நிபுணத்துவ மருத்துவர்களின் சேவைகளைப் பெறுவதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் மருத்துவர்களுக்கு தரமான பட்டப்பின் மருத்துவக் கல்வியை வழங்குவதன் மூலம் நாடு தனது பேண்தகு வளர்ச்சி இலக்கை எளிதாக அடைந்துகொள்ள முடியும். அனைத்து குடிமக்களும் அவர்களுடைய ஆரோக்கியமான ஆயுட்காலத்தை அதிகரித்துக்கொள்வதற்காக அனைத்து வயதைச் சேர்ந்த குழந்தைகள் மற்றும் ஆண்கள் மற்றும் பெண்களின் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்படுதல் வேண்டும். மருத்துவர்கள் தங்களுடைய ஆரம்ப மருத்துவக் கல்வியை நிறைவு செய்ததன் பின்னர் நிபுணத்துவ மருத்துவர்களின் மேற்பார்வையின் கீழ் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான நிறுவகம் மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகமாகும். மேலும் இது மருத்துவர்களின் சான்றிதழ் மற்றும் /அல்லது உரிமத்திற்கான இறுதிப் படிமுறையாகும்.

தற்போது பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, முதுமாணிப் பட்டம் மற்றும் எம்.டி. பாடநெறிகளை நடாத்துவதற்கான பொறுப்பைக் கொண்டுள்ள ஒரே நிறுவகம் மருத்துவ பட்டப்பின் பின் படிப்பு நிறுவகமாகும். பாடங்களுக்குப் பொறுப்பான சபைகளில் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலிருந்தும் தொடர்புடைய நிபுணர்கள் இருக்கின்றனர். எம்.டி.பாடநெறியைப் பயிலும்போது இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, சிங்கப்பூர் அல்லது இந்திய போன்ற நாடுகளின் அங்கீகரிக்கப்பட்ட கற்கை மையமொன்றில் குறைந்த

பட்சம் ஒரு வருட கால வெளிநாட்டுப் பயிற்சி உள்ளடங்கும். மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் அனைத்து முக்கிய துறைகளிலும், துணைத் துறைகளிலும் நிபுணத்துவ அறிவை வழங்குகின்றது. அனைத்து நிபுணத்துவ துறைகளிலும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புதல் சுகாதார அமைச்சின் பொறுப்பாகும். தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்குக்கூட பெரும்பாலான நிபுணத்துவத் துறைகளுக்கு நிபுணர்கள் போதுமானளவில் இல்லை. அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்காக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம், மருத்துவர்களுக்கு பாடநெறிகளை உருவாக்குதல் மற்றும் அதனூடாக நாட்டில் நிபுணத்துவ மருத்துவர்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

பின்வரும் முறைகள் ஊடாக நாட்டின் நிபுணத்துவ மருத்துவர்களுக்கான தேவையை பூர்த்தி செய்வதற்குத் தேவையான தரவுகளை சேகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. நகர்ப்புற மற்றும் கிராமப்புற மருத்துவமனைகளில் நிபுணத்துவ மருத்துவர்களாகப் பணியாற்றும் மருத்துவர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுதல்.
2. அனைத்து அரச பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.
3. மேலும், பொது மக்களின் பாலினம் மற்றும் ஏனைய உடல்நலம் தொடர்பான தேவைகளின் அடிப்படையில் நோய்களை இனங்கண்டுகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் அதற்கேற்ப நிபுணத்துவ மருத்துவர்களுக்குப் பயிற்சியளித்தல். உதாரணம் :- பெண் நோயியல், முதியோர் மருத்துவம்.
4. இராணுவ மற்றும் பொலீஸ் மருத்துவமனைகள் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.
5. தனியார் மருத்துவமனைகள் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.
6. சுகாதார அமைச்சு மற்றும் மருத்துவமனைகளின் பணிப்பாளர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

மேற்கூறப்பட்ட விடயங்களை அடைந்துகொள்வதற்காக, கிராமப்புறம் உட்பட்ட அனைத்து மருத்துவமனைகளினதும் உட்கட்டமைப்பு வசதிகளும் இணையான வகையில் மேம்படுத்தப்படல் வேண்டுமென்பதுடன் அதனூடாக நிபுணத்துவ மருத்துவர்களால் நாட்டு மக்களுக்கு ஒரு சிறந்த சேவையைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

மேலும் இந்த நிறுவகம் பேண்தகு அபிவிருத்தியின் பிரதான நோக்கங்களான சுகாதாரம், நல்வாழ்வு மற்றும் பசுமை எண்ணக்கரு ஆகிய பிரிவுகளின் கீழ் உச்சளவு சேவையொன்றை வழங்கி வருகின்றது. அதனுடன் தொடர்பான வகையில் மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் ஊடாக அந்த நிறுவனத்துடன் தொடர்புடைய பிரஜைகளின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்தும் நோக்கில் சுகாதார நிலையமொன்று மற்றும் பகல் நேர பராமரிப்பு மையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நிறுவகத்தின் சுகாதார நிலையத்தினூடாக அதன் ஆளணி அங்கத்தவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களுக்கு சிகிச்சையளிக்கும் சேவையையும் மேற்கொண்டு வருகின்றது. ஊழியர்களுக்கு உரிய தடுப்பு, பராமரிப்பு சேவைகள் மற்றும் வருடாந்த பரிசோதனைகளை மேற்கொள்ளாவிட்டால் அவர்கள் கடும் நோய்களுக்கு ஆளாகுவதனால் அவர்களுக்கு நீண்ட காலமாக சேவைக்கு சமுகமளிக்க முடியாத நிலைமை ஏற்படும். இலகுவாக ஆரோக்கியமாகப் போன்றே மகிழ்ச்சியாக இருப்பதற்கு முடியுமாக இருத்தல் ஊழியர்களின் அலுவல்களின் தரத்தையும் அதிகரிக்கும். மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் அனைவருக்கும் நியாயமான மற்றும் போதுமானளவு உடல் ஆரோக்கிய வசதிகளை வழங்குதல் மற்றும் தனது கடமை சார்ந்த வாழ்க்கைசமநிலையில் வைத்துக்கொள்வதில் மேலதிக உதவி தேவைப்படும் பெண்களுக்காக விசேட கவனத்தை செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. 12 வயதிலும் குறைந்த பிள்ளைகளுக்காக பட்டப்பின் மருத்துவ நிறுவகத்தில் பகல் நேர பராமரிப்பு நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன், அதனூடாக கடமையில் ஈடுபட்டுள்ள தாய்மார்கள் நிறுவகத்திற்கு வெளியில் பகல் நேர பாதுகாப்பு நிலையங்களை தேடும் சிரமங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த வசதி ஊடாக நிறுவகத்தில் பணியாற்றும் பெண் உத்தியோகத்தர்களுக்கு தமது பிள்ளைகளை இலவசமாக பாதுகாப்புக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக ஆளணியில் வினைத்திறன் மேம்படுத்தப்படும்.

இது தவிர சக்திப் பாதுகாப்பு, Microsoft Teams போன்ற புதிய தொழில்நுட்பப் பயன்பாடுகள், சூழல்நேய நடத்தை மாற்றங்கள் மற்றும் சுகாதார நேய உணவுப் பழக்கங்கள் போன்ற விடயங்கள் சம்பந்தமாக மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் ஊடாக அந்த நிறுவனத்துடன் தொடர்புடைய பிரஜைகளை அறிவுறுத்தும் நோக்கில் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

மேலும், மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தினால் பசுமை மருத்துவ பட்டப்பின் நிறுவகமொன்றை உருவாக்கும் நோக்கில் பசுமை ஆரம்பமொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், இந்தப் பேண்தகு பசுமை ஆரம்பமானது நீர் வளங்கள் மற்றும் வலுசக்தி பாதுகாப்பைப் போன்றே சுத்தமான சூழல் எனும் எண்ணக்கருவை விருத்தி செய்யும். அதனை முழுமையானதொரு எண்ணக்கருவாக்கும் நோக்கில் 2020 ஆம் ஆண்டில் நிறுவகத்தினுள் பசுமை எண்ணக்கருவை அறிமுகஞ் செய்து எழுத்து மூலமாக குறித்த எண்ணக்கரு தாபிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பசுமைக் குழுவொன்றும் அமைக்கப்பட்டதுடன் கடந்த ஆண்டு முதல் அந்தக் குழு பல்வேறுபட்ட சூழல்சார் அடையாளங்களின் அடிப்படையில் செயற்படுகின்றது. மருத்துவ பட்டப்பின் நிறுவகம் குறித்துரைக்கப்பட்ட நோக்கம், நோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றைப் போன்றே கோட்பாடுகளையும் கொண்டுள்ளது. மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தினூடாக பிரதான வளாகத்தில் காணப்பட்ட CFL மின் குமிழ்களுக்குப் பதிலாக LED மின் குமிழ்கள் பொருத்தப்பட்டதுடன் ஸ்மார்ட் கட்டிடமொன்றாகக் கருத முடியுமான ரொட்னி வீதியில் நிர்மாணிக்கப்பட்ட கற்கை மையத்திலும் LED மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தினால் மாறுதிசையாக்கி வளி சீரமைப்பிகள் (inverter A/Cs), மாஸ்ட்டர் சுவிச் மற்றும் குறைந்த சக்தி மற்றும் வலுசக்தியை வினைத்திறனுடன் பயன்படுத்தப்படும் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. அத்தோடு போட்டோ பிரதி இயந்திரங்கள் மற்றும் ஸ்கேனர்கள் போன்ற சாதனங்களை இணைந்து பயன்படுத்துவதனையும் ஊக்குவிக்கப்பட்டது. நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட பசுமை ஆரம்பங்களிடையே மிகவும் முற்போக்கான நடவடிக்கை காகிதப் பயன்பாடுகளின்றிய நிறுவகமொன்றாக மாறுவதாகும். ஆய்வுக் கட்டுரைகள் தவிர ஏனைய அனைத்து எழுத்தாவணக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கையளிப்புக்களை மின்னஞ்சல் மூலமாக மேற்கொள்ளுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து உள்ளக ரீதியிலான தொடர்பாடல்களையும் Microsoft Teams ஊடாக மேற்கொள்வதுடன், அனைத்துக் குழுக் கூட்டங்கள் மற்றும் விரிவுரைகள் இணையவழி மூலமாக மேற்கொள்ளப்பட்டது. இந்த அணுகுமுறை ஊடாக காகிதங்கள் பயன்பாடு 65% - 70% வரை குறைத்துக்கொள்ளப்பட்டது. ஸ்மார்ட் கட்டிடத்தில் கை உலர்த்திகள் பயன்படுத்தப்பட்டமைக்கான காரணம் அங்கு கை துடைக்கும் காகிதங்களைக் குறைத்து காகிதக் கழிவுகளைக் குறைக்கும் நோக்கத்திலாகும். தாளின் இரு பக்கத்தையும் பயன்படுத்தி அச்சிடல் நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுவதுடன் சுமார் இரண்டு வருடங்கள் மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தில் பணி புரிபவர்கள் கண்ணாடி உபகரணங்கள் மற்றும் இயற்கையாக உக்கும் கோப்பைகளைப் பயன்படுத்துகின்றனர். உணவகத்தில் பொலித்தீன் உணவுப் பொதியிடல் தாள்கள் பயன்படுத்தல் தடை செய்யப்பட்டுள்ளதுடன், அனைவரும் தமது உணவுகளை பாத்திரமொன்றில் எடுத்துவரல் வேண்டும். கழிவுப் பொருட்களை வேறாக்குதலை CMC தரப்படுத்தலுக்கமைய தனித் தனியான குப்பைக் கூடைகளில் கழிவுகள் இடப்படுகின்றது.

இந்த ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவாக நாங்கள் பல சவால்களை எதிர்கொண்ட போதிலும், இணையவழி செயல்பாட்டுடன் கூடிய காகிதமற்ற அலுவலகத்திற்கு நாங்கள் மாறியமையினால் சில பசுமை எண்ணக்கருக்களை செயற்படுத்தும் நடைமுறையைத் தொடர முடியுமாக இருந்தது. எனவே பசுமை எண்ணக்கருக்களை திறம்பட செயற்படுத்துவதற்கு மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் (PGIM) முடியுமாகியது.

2022 ஆம் ஆண்டில் பசுமை முயற்சிகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டதுடன், மேலும் 2022 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிடப்பட்ட பசுமை அணுகுமுறைகளை செயல்படுத்துவதை PGIM தீவிரமாக கண்காணித்துள்ளது. மின்சார பயன்பாட்டை குறைப்பதற்காக வளிச் சீரமைப்பிகளை பயன்படுத்துவதற்குப் பதிலாக ஒரு பிரிவில் பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும்போது மின்விசிறிகளைப் பயன்படுத்துவதைக் கருத்திற்கொண்டு ஊழியர்களுக்கு பெடஸ்டல் மின்விசிறிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், Ul Green Metric ***விருதைப் பெறுவதற்காக, கார்பன் தடம் பயன்பாடு (அதாவது, மொத்த பசுமை இல்ல வாயு உமிழ்வுகள்) பற்றிய புள்ளிவிவரங்களை கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு வழங்கியுள்ளோம்.***

16. 2022 ஆம் ஆண்டின் விசேட நிகழ்வுகள்





புத்தாண்டு நிகழ்வுகள் - 2022





1 ஆவது முகாமைத்துவ சபைக் கூட்டம் - 2022





PGIM இன் ஆளணிக்கான பயிற்சிப் பட்டறை

17. கணக்காய்வு அறிக்கை



எனது இல. : HED/B/PGIM/2022/FA/02 2023 யூன் 23 ஆம் திகதி

பணிப்பாளர்

மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகம்.

கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

உறுதிப்படுத்தப்பட்ட கணக்கு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கை இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

டப்ளியு.எம்.பீ.ஏ.பொன்சேக்கா

பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி சார்பாக.

பிரதிகள் :

01. செயலாளர் - கல்வி அமைச்சு
02. செயலாளர் - நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
03. தலைவர் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
04. துணைவேந்தர், கொழும்புப் பல்கலைக்கழகம்

306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

எனது இல. HED/B/PGIM/2021/FA/01 திகதி : 2021 யூன் 23 ஆம் திகதி

பணிப்பாளர்,
மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்

கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 fUj;Jiu

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107 (5) உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1980 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஒழுங்கு விதிமுறையில் 20 ஆவது பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108 (1) பிரிவுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சபையில் சமர்ப்பிக்கப்படும்.

நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அந்தத் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 கருத்துரைக்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய என்னால் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துரைக்கான அடிப்படையை வழங்குவதன் நிமித்தம் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சாட்சியங்கள் போதுமானவை மற்றும் பொருத்தமானவைகள் என நான் நம்புகின்றேன்.

1.3 நிறுவனத்தின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வறிக்கைத் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த ஆனாலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது சம்பந்தமான எனது கணக்காய்வறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் எனக் கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்தினூடாக ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன் அது சம்பந்தமாக எந்த விதமான உறுதிப்படுத்தலையோ அல்லது கருத்தையோ வெளியிடவில்லை.

நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கணக்காய்வுடன் தொடர்புடைய எனது பொறுப்பு என்னவெனில், மேலே இனங்கண்டுகொள்ளப்பட்ட ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது அல்லது வேறு விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவுக்கமைய பொருண்மை ரீதியில் பொருந்துவதில்லையா என்பதனை கவனத்திற்கொள்வதாகும்.

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தகவல்களின் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இருப்பதாக தீர்மானித்தால், அந்த விடயங்களை நான் அறிக்கைப்படுத்தல் அவசியமாகும். இது சம்பந்தமாக எனக்கு அறிக்கைப்படுத்துவதற்கு எதுவுமில்லை.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரித்தல் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிறுவகத்தை தொடந்தும் நடாத்துவதற்கான ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் முகாமைத்துவம், நிறுவகத்தை கலைத்துவிடுவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்புடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் நிறுவகத்தின் வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக, நிதிக் கூற்றுக்கள் ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடாக இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன், அதன் அளவானது இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுக்குக் கருத்துரைக்கான அடிப்படையைப் பெற்றுக்கொள்ளும்போது ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடிய ஆபத்தை இனங்கண்டுகொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பிழையாகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.
- உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிக்கும் நோக்கில் இல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக நிர்வாகம் சம்பந்தமான தெளிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது கருத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவுறுத்தப்படலாம்.
- நிதிக் கூற்றுக்களில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் மொத்த முன்னிலைப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு வினைத்திறனின்மை மற்றும் ஏனைய பொதுவான விடயங்கள் சம்பந்தமாக நிர்வகிக்கும் தரப்புக்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களை நான் பெற்றுக்கொண்டதுடன், எனது ஆய்வின்போது நிறுவகம் உரிய நிதி அறிக்கைகளை பேணி வந்துள்ளமையை காண முடியுமாக இருக்கின்றது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கடந்த ஆண்டில் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் மற்றும் அளவு சார்ந்த விடயங்களுக்குள் வரையறுக்கப்பட்ட வகையில் கீழ் குறிப்பிடப்படும் கூற்றுக்களை வெளியிடுமளவிற்கான எந்த விடயமும் எனது கவனத்திற்குட்படவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிறுவகத்தின் நிர்வாக சபையின் எவரேனுமொரு அங்கத்தவருக்கு நிறுவகத்துடன் தொடர்புடைய ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு விதத்தில் பொதுவான வர்த்தக நிலைமைக்குப் புறம்பான வகையில் தொடர்பு இருத்தல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய கீழ் குறிப்பிடப்படும் அவதானிப்பைத் தவிர ஏதேனுமொரு ஏற்புடைத்தாகும் எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இயைந்துசெல்லாத வகையில் செயற்பட்டிருத்தல்.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிறுவகத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் அலுவல்களுடன் இயைந்துசெல்லாத வகையில் செயற்பட்டிருத்தல்.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிறுவகத்தின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் மற்றும் பயன்மிக்க வகையில் காலப் பகுதியினுள் ஏற்புடைய சட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய கொள்வனவு செய்து பயன்படுத்தப்பட்டிருக்காமை.

3. ஏனைய விடயங்கள்

(அ) 01 முதல் 07 வருட காலமாக நிலவிவரும் மொத்தம் ரூ.14,988,019 பெறுமதிமிக்க நானாவித கடன் மீதிகள், ஒரு வருடத்திலும் பழைய மொத்தம் ரூ. 741,703 செலுத்த வேண்டிய வைப்புக்கள் மற்றும் மொத்தம் ரூ. 1,131,929 அட்டுறு செலவுகள் மீளாய்வாண்டிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015, 2016 மற்றும் 2107 ஆம் ஆண்டுகளுடன் தொடர்பாக சுகாதார அமைச்சிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூ. 2,597,375 தொகை மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

டப்ளியூ.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

Postgraduate Institute of Medicine
University of Colombo, Sri Lanka

Professor Senaka Rajapakse
MD, FRCP(Lon), FRCP(Edin), FCCP, FACP, FNAS(SL)
Director

AB/C/PGIM

2023 யூலை மாதம் 24 ஆம் திகதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு உப அலுவலகம்,

<u>கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை</u>

மேலே குறிப்பிடப்பட்ட விடயத்துடன் சம்பந்தமாக எமக்கு அனுப்பப்பட்டுள்ள இலக்கம்: HED/B/PGIM/2022/FA/02 மற்றும் 2023 யூன் மாதம் 30 ஆம் திகதி எமக்குக் கிடைக்கப்பெற்ற கணக்காய்வு அறிக்கையுடன் சம்பந்தப்பட்டதாகும்.

அதற்கமைய அதற்கான பதில்களை இத்துடன் அனுப்புவதாக தயவாய் அறியத் தருகின்றேன்.

3. ஏனைய விடயங்கள்

(அ) தற்போது நானாவித கடன் நிலுவைகளுடன் தொடர்புடைய தகவல்கள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு வருவதுடன், 2023 ஆம் ஆண்டினுள் பெற்றுக்கொள்வதற்கு முன்வராத மீதிகளை வருமானத்தில் வரவு வைப்பதற்காக நிறுவகத்தின் நிதிக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். மேலும் செலுத்த வேண்டிய வைப்புக்கள் மற்றும் அட்டுறு செலவுகளையும் இந்த ஆண்டினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

(ஆ) இந்தத் தொகையை துரிதமாக திருப்பிச் செலுத்தி ஈடு செய்யுமாறு மீண்டும் நினைவூட்டி 2023 யூலை 19 ஆம் திகதி சுகாதார அமைச்சுக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது. (இணைப்பு 01).

பேராசிரியர் சேனக்க ராஜபக்ஷ
மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்

Postgraduate Institute of Medicine
University of Colombo, Sri Lanka

Professor Senaka Rajapakse
MD, FRCP(Lon), FRCP(Edin), FCCP, FACP, FNAS(SL)
Director

සිවිවන සිහිකැඳවීම

My No: PGIM/AB/K

2023 ජූලි මස 19

අධ්‍යක්ෂ ජනරාල්
සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය

වෛද්‍ය විද්‍යා පශ්චාත් උපාධි ආයතනය වෙත ගෙවීම් කිරීමට ඇති පාඨමාලා ගාස්තු සහ පුස්තකාල පරිශ්‍රය සඳහා කුලිය ගෙවීම.

උක්ත කරුණ සම්බන්ධයෙන් 2020.11.12 දින නිකුත් කරන ලද අභ්‍යන්තර සටහන සම්බන්ධවයි.

ඔබ ආයතනය විසින් ගෙවීම් කිරීමට ඇති පහත සඳහන් හිඟ මුදල් සම්බන්ධයෙන් අප විසින් මීට පෙර් අවස්ථා කිහිපයකදි සිහිකැඳවීම් සිදුකර ඇති අතර මෙතෙක් ඒ සඳහා ක්‍රියාමාර්ග ගෙන නොමැත. අදාල හිඟ මුදල වූ රු.2,597,375.00 සම්බන්ධයෙන් 2022 වර්ෂයේ විගණන වාර්තාවෙහිද සඳහන් කර ඇති බැවින් අදාල මුදල් හැකි ඉක්මනින් අප වෙත ප්‍රතිපූරණය කිරීමට කටයුතු සම්පාදනය කරනු ඇතැයි කාරුණිකව අපේක්ෂා කරමි.

මේ සම්බන්ධව සෞඛ්‍ය හා පෝෂණ අමාත්‍යාංශය විසින් ගෙවීමට අවශ්‍ය ඉදිරි කටයුතු කිරීමට නිකුත් කරන ලද ලිපිවල ජායාපිටපත් මේ සමඟ අමුණා එවමි.

විස්තරය	වසර	හිඟ මුදල (රු.)
පුස්තකාල පරිශ්‍රය සඳහා කුලිය	2015	981,625.00
	2017	700,000.00
පාඨමාලා ගාස්තු	2016	915,750.00
මුළු මුදල		**2,597,375.00**

මහාචාර්ය සේනක රාජපක්ෂ
අධ්‍යක්ෂ
වෛද්‍ය විද්‍යා පශ්චාත් උපාධි ආයතනය

General Office: 160, Prof. Nandadasa Kodagoda Mawatha, Colombo 07, Sri Lanka. Tel: +94 11 2697758/2696261/2681052 Web: www.pgim.cmb.ac.lk

Director	Academic Branch	Examinations. Branch	Library	Medical Education Resource Centre
Tel:+94 11 2688649	Tel: +94 11 2687511	Tel: +94 11 2683467/2696258	Tel: +94 11 2697760/61	Tel: +94 11 3612906
Fax: +94 11 2697757	Fax: +94 11 2687806	Fax: +94 11 2687803	Fax: +94 11 2687050	merc@pgim.cmb.ac.lk

අභ්‍යන්තර සටහන

සෞඛ්‍ය, පෝෂණ හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය

වෙත : අධ්‍යක්ෂ (ගොඩනැගිලි)

වෙතින් : ගණකාධිකාරී (මුදල්) වැය 11

පිටපත් ✓ අධ්‍යක්ෂ වෛද්‍ය විද්‍යා පශ්චාත් උපාධි ආයතනය

විෂයය : වෛද්‍ය විද්‍යා පශ්චාත් උපාධි ආයතනය වෙත පුස්තකාල පරිශ්‍රය සඳහා කුලිය ගෙවීම.

යොමු අංකය : FXM

දිනය : 2020.11.17

ඉහත කරුණ සම්බන්ධයෙන් වෛද්‍ය විද්‍යා පශ්චාත් උපාධි ආයතනයේ 2020 ජූලි මස 28 දිනැති ලිපිය හා සබැඳේ.

වෛද්‍ය විද්‍යා පශ්චාත් උපාධි ආයතනය වෙත පුස්තකාල පරිශ්‍රය සඳහා කුලිය ලෙස 2015 හා 2017වෙනුවෙන් රු. 1,681,625.00ක් ගෙවීමට ඇති බව දන්වා එවා ඇත. එයට අදාල වවුචර් පත් එවීමට කටයුතු කරන මෙන් කරුණාවෙන් දන්වා සිටිමි.

වෛද්‍ය විද්‍යා පශ්චාත් උපාධි ආයතනය විසින් එවා ඇති ලිපියේ පිටපතක් ඉමයට අමුණා එවමි.

Director
Tel:+94 11 2688649
Fax:+94 11 2697757

Academic Branch
Tel: +94 11 2687511
Fax: +94 11 2687806

Examinations. Branch
Tel: +94 11 2683467/2696258
Fax: +94 11 2687803

Library
Tel: +94 11 2697760/61
Fax: +94 11 2687050

Medical Education Resource Centre
Tel: +94 11 3612906
merc@pgim.cmb.ac.lk